
ISSN 1391-9504

# Vijey விஜய்

# விஜய்

04.03.2009 - மலர் 05, இதழ் 52

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## ஏலத்தில் விடப்படவுள்ள நாஸாவின் விண்ணோடங்கள்




Rs.25.00

## ராட்சதர்கள் - குள்ளர்கள் ஆச்சரியம்தரும் பிறவிகள்



## மழை நீரை சேமிப்போம்





விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலை களஞ்சியமாகப் பயன்படுத்தும் தேன்குட எறும்புகள்



தேன்குட எறும்புகள் (Honeypot ants) என்னும் எறும்பு இனம் பற்றி நீங்கள் அறிவீர்களா? இந்த எறும்புகள் தேனை தமது உடலில் குடம் போல சுமந்து கொண்டு இருப்பதால் இந்தப் பெயர் வந்துள்ளது. இந்த எறும்புகள் பாலைவனம் மற்றும் வறண்ட பகுதியோரங்களில் இருந்து வருகின்றன. மழையின் பின்னர் குறுகிய காலம் உயிர் வாழும் தாவரங்களில் இருந்து அதிக தேன் கிடைக்கின்றது. இந்த தேனைச் சேகரிக்கும் தேன்குட எறும்புகள் ஏனைய சில எறும்புகளுக்கும் இந்தத் தேனை வழங்குகின்றன. தேன் நிரம்பியுள்ள நிலையில் இந்த எறும்புகள் ஒரு திராட்சைப்பழ அளவுக்கு பருமன் கொள்கின்றன.

தேன் முற்றாக முடிந்த பின்னர் இந்த எறும்புகளின் வயிறுகள் சுருங்கி ஏனைய எறும்புகள்போல் காட்சி தருகின்றன. தேன்குட எறும்புகள் இவ்வாறுதான் தமது உணவைச் சேமிக்கின்றன. இந்த எறும்புகள் வறண்ட பகுதிகளில் வாழும் ஏனைய பல உயிரினங்களுக்கு உணவளிப்பவையாகவும் உள்ளன.

தேனீ போன்ற பல இன உயிரினங்கள் உணவு கிடைக்காத காலத்தில் அல்லது மழைக்காலத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காக தேனை அல்லது உணவுப் பொருட்களை சேகரித்து தமது கூடுகளிலேயே களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்கின்றன. இந்த வகையில் தேன்குட எறும்புகள் வித்தியாசமானவை. இவை தேனை தமது உடலிலேயே களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்கின்றன. அத்துடன், இவை உணவைக் களஞ்சியப்படுத்தி வைப்பத்தை விட ஏனைய வேலைகளிலும் ஈடுபடுகின்றன. திரவ வகை உணவுகள் மற்றும் வேலைக்கார எறும்புகள் கொண்டு வரும் வேட்டையாடப்பட்ட ஐந்துக்களையும் இவை சேகரித்து வைத்துக் கொள்கின்றன. இவ்வாறு களஞ்சியப்படுத்தப்படும் உணவுகளை பின்னர் உணவுத்தேவை ஏற்படும் வேளையில் தமது சகாக்களுக்குப் பரிமாறுகின்றன. சில குறிப்பிட்ட பகுதிகளில் இந்த எறும்புகள் இனிய மற்றும் சுவைமிகு உணவுகளாக மனிதர்களாலும் உண்ணப்படுகின்றன.

எறும்பு இனங்களைப் பொறுத்தவரை அவை ஒரு கட்டுப்பாடுள்ள இனம் என்று கூறலாம். இவை ஒரு அரசி, பெண் வேலைக்கார எறும்புகள் உட்பட பலவகையான குழுக்களாக வாழ்கின்றன. எறும்பு இனங்கள் உலகெங்கும் உஷ்ண மற்றும் குளிர் பிரதேசங்களில் வாழ்கின்றன. எறும்பு இனங்களில் தீங்கிழைக்கும் பல இன எறும்புகளும் இருக்கின்றன. இதேவேளை, நன்மைகள் பல செய்யும் எறும்புகளும் இருக்கின்றன.

பூமிக்குள் காற்று செல்வதற்கு வசதியாக எறும்புப் புற்றுக்கள் இருக்கின்றன. சில இன எறும்புகள் தீமை செய்யும் சிறு உயிரினங்களைத் தின்று அழித்து விடுகின்றன. தாவர உண்ணி எறும்புகள் களைகளைத் தின்று அழிப்பதால் சூழல் பாதுகாப்புக்கும் உதவுகின்றன. சில எறும்புகள் விதைகளைக் கொண்டு செல்வதன் மூலம் பல்வேறு இடங்களில் தாவர வளர்ச்சி ஏற்படுவதற்கும் உதவி புரிகின்றன. -ராஜா

## A யிலிருந்து Z வரை மலர்கள்

(தொடர்ச்சி...)

P



**Periwinkle**
கல்லறைப் பூ



**Primrose**
பிரம்மரோஜா



**Poppy**
பொப்பி மலர்



**Pinna**
பின்னமலர்



**Puna flower**
லில்லி போன்ற ஒற்றை மலர்



**Pathan flower**
பெதன் மலர்



**Passion flower**
கொடித்தோடை மலர்



**Peltophorum**
மஞ்சள் பூ



**Pine flower**
அன்னாசி மலர்

Q



**Quill flower**
பருத்தி மலர்



**Quaint flower**
காசித்தும்பை மலர்



**Quadrangle flower**
மனோரஞ்சிதம் மலர்

R



**Rose**
ரோஜா



**Rythrina**
முள்முருங்கை



**Rafflesia**
ரெப்லேசியா

(மிகுதி அடுத்த இதழில்)

தொகுப்பு: ச.ஷியாம்தேவ், மந்தண்டாவளை, மாத்தளை.

## 'கார்ட்டூன்' கதைகள்

வேடிக்கையும் குறும்பும் நிறைந்த 'கார்ட்டூன்கள்' 16 ஆம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டன என்பது உங்களுக்குத் தெரியுமா? அப்போது, புகழ் பெற்ற ஓவியரான லியோனார்டோ டாவின்சி பெரிய படங்களை வரைவதற்கு முன் மாதிரியாக சில படங்களை வரைந்தார். அவை 'கார்டோனி' என்று அழைக்கப்பட்டன. காரணம் அவர் 'கார்டோனி' என்ற ஈரமான பரப்பின் மீது அது போன்ற மாதிரிப் படங்களை வரைந்ததுதான்.

1840 ஆம் ஆண்டளவில் இதுபோன்ற படங்களைக் கொண்டு இங்கிலாந்து நாடாளுமன்றக் கட்டடச் சுவர்களை அலங்கரிக்க முடிவெடுத்தது சர்ச்சையைக் கிளப்பியது. 'காமாசோமா' என்று இருந்த அந்தப் படங்களை 'கார்ட்டூன்கள்' என்று இங்கிலாந்துப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. அன்று முதல் வேடிக்கையான கருத்துப்படங்களுக்கு 'கார்ட்டூன்' என்ற பெயரே நிலைத்து விட்டது.





லியோனோர்டா டாவின்சி

அத்துடன், 'கார்ட்டூன்' படங்கள் வளர்ந்து வந்துள்ளன. 1940 ஆம் ஆண்டில் ஐந்து மொழிகளில் பிரசுரமாகத் தொடங்கிய 'சந்த மாமா' இதழ் இந்திய கொமிக்ஸ் பத்திரிகைகளில் முன்னோடி ஆகும். ஆனால், 1980 களில் பிரசுரமாகத் தொடங்கிய 'டிங்கிள்'தான் முழுமையான முதல் 'கொமிக்ஸ்'பத்திரிகை.'தர்மயுக்' பத்திரிகையில் வெளியான அபித் சுர்தி வரைந்த 'தாபாஜி கொமிக்ஸ் துண்டுப்படங்களுக்கு ஏராளமான ரசிகர்கள் இருந்தனர். அந்த ரசிகர்களில், அப்போது சிறுவனாக இருந்த முன்னாள் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் அடங்குவார்.

1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'இந்திரஜால் கொமிக்ஸின்' 'மாயாவி' மற்றும் மாண்ட் ரேக்' ஆகியோர் சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் ஈர்த்தனர். இதே ஆண்டுகளில் வெளியாகத் தொடங்கிய 'அமர் சித்ர கதா' என்ற இதழ் புராண,அறிவியல்,வரலாற்றுக் கதைகளை வெளியிட்டது.

கார்ட்டூன் கதாபாத்திரங்களில் எண்ணற்றோரை ஈர்த்த 'சச்சா சவுத்ரி', இந்தி இதழான 'லாட்பாட்'டில் 1970 ஆம் ஆண்டுகளில் வெளியாகத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளை நாடு முழுவதும் நிறுவ நடவடிக்கை

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



க.பொ.த (உ/தர) பரீட்சைக்குத் தோற்றி, திறமையான சித்தியைப் பெற்றாலும்கூட பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக நாடெங்கிலும் தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபால தெரிவித்துள்ளார்.

இன்று உலகளவில் தொழில்நுட்பத்துறை நவீன விருத்தி கண்டு வரும் நிலையில் மாணவர்களுக்கு கணினி மற்றும் ஆங்கிலமொழி அறிவு அவசியமாக இருக்கின்றது. ஆகவே, பாடசாலைகளில் உயர்கல்வி கற்று வெளியேறும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப அறிவு வழங்குவது காலத்தின் தேவையாகும்.

இதனைக் கருத்தில் கொண்டே பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவி, தொழில்நுட்பக் கல்வியை வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக கேகாலையில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சிக் கல்லூரியின் திறப்பு விழாவில் உரையாற்றும்போது அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளில் நல் அபிவிருத்தித் திட்டம்

நாடெங்கிலும் அமைந்துள்ள சகல அரசாங்கப் பாடசாலைகளிலும் நல் அபிவிருத்திகளை மேம்படுத்தி, பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதற்கான திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு பாடசாலைகளில் அபிவிருத்திச் சங்கம் மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை அமைக்குமாறு கல்விச் செயலாளர் நிமல் பண்டார சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல், நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டங்களை செயற்படுத்துதல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே இவ்விரு சங்கங்களும் அமைக்கப்படவுள்ளன. அத்துடன், குறைந்தது மாதத்துக்கொரு முறையேனும் பாலர் பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஒன்றுகூட வேண்டும் எனவும் கல்வி அமைச்சினூடாக வலியுறுத்தப்பட்டுள்ளது.



## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பொது அறிவு போட்டிப் பரீட்சை



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்து அறநெறிப் போட்டிப் பரீட்சை ஒன்றை மே மாதமளவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.


இத்திணைக்களத்தில் தம்மை பதிவு செய்துள்ள அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கே மேற்படி பரீட்சை நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள், இப்பரீட்சைக்கான தமது விண்ணப்பப்படிவத்தை **பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 1/1, காலி வீதி, கொழும்பு-04** என்ற முகவரிக்கு மார்ச் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

# மனிதக் கொழுப்பு எரிபொருள்








**இன்றைய உலகில் எரிபொருள் இன்றியமையாததாக இருக்கின்றது. இதனால், எரிபொருள் தட்டுப்பாடு, அதன் விலையேற்றம், இதன் காரணமாக பொருட்கள், சேவைகளின் விலையேற்றம் என்பன தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. பொதுவாக பெற்றோல், டீசல், இயற்கை எரிவாயு, சாண எரிவாயு, தாவர எண்ணெய், விறகு போன்ற எரிபொருட்களைப் பற்றியே நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால், இவை அனைத்தையும் விட புதியதொரு எரிபொருளும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதுதான் மனிதக் கொழுப்பு எரிபொருள்.**


**அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள 'பெவர்லி ஹில்ஸ்' பகுதியில் வாழ்ந்த க்ரெய்க் எலன் பிட்னர் என்ற வைத்தியர் உடல் எடையைக் குறைப்பதற்கு தன்னிடம் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் உடலிலுள்ள அளவுக்கதிகமான கொழுப்பை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி- அந்தக்கொழுப்பை உருக்கி-எண்ணெய்யாக மாற்றி- அதனை தனது காரில் எரிபொருளாகப் பயன்படுத்தி வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதோடு, இது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், இந்த மருத்துவர் மருத்துவத்துறைக்கான அனுமதிப் பத்திரம் பெறாத சிலரின் உதவியுடன் நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ததாக சில நோயாளிகள் இவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

**இந்த எரிபொருள் "Lipo fuel" என அழைக்கப்படுகின்றது. ஒரு கிலோ மனிதக் கொழுப்பிலிருந்து அதே அளவு எரிபொருளை உற்பத்தி செய்து கொள்ளலாம் என அமெரிக்க உயிரியல் வாயு உற்பத்தி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

**-ஜீநு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 111 வயதில் தந்தையான டைனோசர் உறவு ஊர்வன





**புற்றுநோயில் இருந்து உயிர் பிழைத்து 11 குட்டிகளுக்குத் தந்தையாகியுள்ளது டைனோசரஸ் பரம்பரை ஊர்வன ஒன்று. இது நியூஸிலாந்து தேசத்திற்கு மட்டுமே உரியதாகும்.**

## டுவடாரா

இது ஓணானின் உருவத்தை ஒத்ததாக இருந்தாலும் ஓணான் வகையைச் சேர்ந்ததல்ல. 20 கோடி வருடங்களுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்ததாக நம்பப்படும் ஊர்வனக் குடும்பத்தின் அங்கத்தவராக இது கருதப்படுகின்றது.

இதன் ஆரம்பகாலம் பருவத்தில் இரண்டு கண்களுக்கு மேலதிகமாக மூன்றாவது கண்ணும் காணப்படுகின்றது. இந்தக் கண் ஊடாகவே விற்றமின் D தயாரிப்பதற்குத் தேவையான சூரியனில் இருந்து வரும் கதிர்களை உறிஞ்சி எடுக்கின்றது. ஆனால், இந்த ஊர்வன வளர வளர மூன்றாவது கண் இல்லாமல் போய்விடுகின்றது. இந்த ஊர்வன நியூஸிலாந்தில் மட்டும் வாழ்கின்ற டுவடாரா என்ற தாவர உண்ணி ஊர்வனவாகும்.

இது 'ஹென்றி' என்றழைக்கப்படுகின்றது. 200 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாக நம்பப்படும் 'டைனோசர்' குடும்பத்தின் உறவினராகக் கருதப்படும் இவ்வூர்வன தோற்றத்தில் ஓணான் போன்றும் ஆனால் ஓணானை விட சற்று வித்தியாசமாகவும் இருக்கின்றது. இதனை நியூஸிலாந்து வாசிகளே ஹென்றி என்றழைக்கின்றனர்.

இந்த டுவடாரா ஊர்வன நியூஸிலாந்தின் இன்வெகாசில் நகர 'சவுத்லண்ட்' அரும்பொருட் காட்சிசாலையில் இருக்கின்றது. இது அண்மையில்தான் அதன் 111 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடியது. அன்றுதான் அதற்கு தந்தையாகும் பாக்கியம் கிடைத்தது. இதன் துணைவியான (பெண்) மில்ட்ரட் என்ற ஓணான் 37 வயது இளமையுடையதாகும்.

இந்த டுவராடாவுக்கு பல வருடங்களுக்கு முன்னர் வயிற்றில் புற்றுநோய் ஏற்பட்டு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. வைத்தியர்கள் தீவிர சிகிச்சையளித்து வந்தனர்.

அதனால், இந்த டுவடாரா இனப்பெருக்க செயற்பாட்டில் நாட்டம் காட்டவில்லை.

எப்போதும் சண்டையிடுவதிலேயே காலத்தைக் கழித்தது. எனினும், வயிற்றில் இருந்த கட்டி சத்திரசிகிச்சை மூலம் அப்புறப்படுத்தப்பட்டதால் குணமடைந்த டுவடாராவுக்கு புதிய உற்சாகம் பிறந்தது. அதனால், தந்தையாகும் பாக்கியம் கிடைத்தது. அதன் துணைவி அண்மையில் 11 குட்டிகளை ஈன்றது. அதனை நியூஸிலாந்து அரும்பொருட்காட்சிசாலை அதிகாரிகள் நல்லமுறையில் பராமரித்து வருகின்றனர்.

இதனை ஓணான் என்று அழைக்க முடியாவிட்டாலும் நியூஸிலாந்துவாசிகள் டுவடாரா 'குடும்ப ஓணான்' என்றே அழைக்கின்றனர். 'டைனோசரஸ்' பரம்பரையில் வரும் 200 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கூறப்படும் அனைத்து ஊர்வன வகைகளும் அழிந்து போய்விட்டநிலையில் அதில் இருந்து கூர்ப்படைந்ததாக விஞ்ஞானிகள் நம்பும் அநேகமான ஊர்வன வகைகளும் இப்போது அழிந்து போய்விட்டன.

ஆனால், அந்தக் குடும்பத்தை நினைவுகூரக்கூடிய நியூஸிலாந்திற்கு மட்டுமே உரிய இந்த ஓணான் வகையைப் பாதுகாப்பதில் அந்நாட்டு அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றனர்.

**அமீர் ஹுஸைன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அட்லாண்டிஸ்

# ஏலத்தில் விடப்படவுள்ள நாஸாவின் விண்ணோடங்கள்


டிஸ்கவரி


என்டிவர்

அமெரிக்காவின் 'நாஸா' நிறுவனமானது தாம் பயன்படுத்திய மூன்று விண்வெளி ஓடங்களை ஏலத்தில் விடுவதற்குத் தீர்மானித்திருக்கின்றது. இந்த விண்ணோடங்கள் 2010 ஆம் ஆண்டில் 30 வருட நிறைவைப் பூர்த்தி செய்யவுள்ளன. அதனை அடுத்தே அவை ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளதாக நாஸா வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளியில் கிரகங்களுக்கிடையில் சஞ்சரிப்பதற்கும் அல்லது 42 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை மேலதிக செலவாக செலவழிக்கத் தகுதியுள்ளவர்களுக்கும் இது மிகவும் முக்கிய செய்தியாக இருக்கலாம்.

## கேள்வி அதிகம்

எவ்வாறாயினும் இந்த விண்ணோடங்களைப் பணம் கொடுத்து வாங்குபவர்களுக்கு அதனைப் பயன்படுத்தி, விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ள முடியாது. மாறாக, அதனை நூதனசாலையிலோ, கல்வி நிறுவனத்திலோ காட்சிப் பொருளாக மாத்திரமே வைத்திருக்க முடியும் என அமெரிக்க விண்வெளி முகவர் நிலையம் தெரிவிக்கின்றது. எனினும், இச்செய்தி கசியத் தொடங்கியது முதல் பல முன்னணி நிறுவனங்கள் முந்திக்கொண்டு அதனை வாங்க முனைகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## விண்ணோடங்கள்

நாஸா நிறுவனமானது இதுவரை ஆறு விண்வெளி ஓடங்களை உற்பத்தி செய்துள்ளது. முதன்முதலாக நிர்மாணிக்கப்பட்ட விண்வெளி ஓடம் இதுவரை எந்தவொரு விண்வெளிப் பயணத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் இரண்டு ஓடங்கள் விபத்துக்குள்ளாகின. இதில் 'செலென்ஜர்' ஓடமானது 1986 இல் வான்வெளியில் எழும்பி 73 செக்கன்களில் வெடித்துச் சிதறி, அதில் பயணித்த ஏழு விண்வெளி வீரர்களும் உயிர் நீத்தனர்.

அதன் பின்னர் 2003 ஆம் ஆண்டு வெற்றிகரமாக விண்வெளி ஆய்வுகளை முடித்துக்கொண்டு பூமியை நோக்கி வந்து கொண்டிருந்த 'கொலம்பியா' விண்கலமானது புவியின் வளிமண்டலத்தில் பிரவேசிக்கும்பொழுது ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த ஏழு விண்வெளி வீரர்களும் உயிர் நீத்தனர்.

அதன்படி, தற்பொழுது மூன்று விண்வெளி ஓடங்களே எஞ்சியுள்ளன. அவை டிஸ்கவரி, அட்லாண்டிஸ் மற்றும் என்டீவர் என்பனவாகும். இவைதான் 2010 ஆம் ஆண்டில் ஓய்வு பெறப் போகும் விண்வெளி ஓடங்களாகும். சர்வதேச விண்வெளி மத்திய நிலையத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்காகவும் 'ஹபல்' தொலைக்காட்டியின் புனர்நிர்மாணப் பணிகளுக்காகவும் மேலும் விண்ணோடங்களை உற்பத்தி செய்ய எதிர்பார்ப்பதனாலும் அதற்குத் தேவையான நிதியைத் திரட்டிக் கொள்வதற்காகவுமே மேற்கூறிய ஓடங்களை ஏல விற்பனைக்கு விடுவதற்குத் தீர்மானித்ததாக நாஸா மேலும் அறிவித்துள்ளது.

## முக்கியத்துவம்

சர்வதேச விண்வெளி மத்திய நிலையம் மற்றும் 'ஹபல்' விண்வெளித் தொலைக்காட்டி என்பன


கொலம்பியா விபத்து


செலென்ஜர் விபத்து

வற்றின் நிர்மாணங்களில் இந்த விண்ணோடங்களுக்கு அதிக பங்குண்டு எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மூன்று விண்வெளி ஓடங்களில் மிகவும் வினைத்திறன் மிகுந்த பல்கூட்டுச் செயற்பாடுகளை உடையதாகக் கருதப்படும் ஒரு விண்வெளி ஓடமும் உள்ளது. இது தோற்றத்தில் ஒரு விமானத்தைப் போன்றதாகும்.

ஏனைய இரண்டு ஓடங்களும் விண்வெளிக்குத் தேவையான பொருட்களையும் உபகரணங்களையும் எடுத்துச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டனவாகும். இந்த இரு ஓடங்களும் அன்றிருந்த அதே பளபளப்புடன் ஃப்ளோரிடாவில் அமைந்துள்ள 'கென்னடி' விண்வெளி மத்திய நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதன் மேலதிக செலவாக குறிப்பிடப்பட்டுள்ள 42 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையில் ஏல விற்பனை நிலையத்திலிருந்து புதிய இடத்துக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை விசேடமாக உருவாக்கப்பட்டுள்ள போயிங் 747 ரக விமானம் மூலம் புதிய இடத்திற்கு வான் வழியாக எடுத்துச் செல்லப்படவுள்ளதோடு, அதற்கான போக்குவரத்துச் செலவினங்களை குறிப்பிட்ட கொள்வனவு நிறுவனமோ, கூட்டுத்தாபனமோ அல்லது தனிநபரோ ஏற்கவேண்டுமென நாஸா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த விண் ஓடங்களின் ஏல விற்பனையின்போது அமெரிக்க நிறுவனங்களுக்கிடையே கடும் போட்டி நிலவும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**-இரஞ்சித் ஜெயகர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நஞ்சினால் ஏற்படும் விபத்து

## விஷம் என்பது

ஏதேனும் திரவம் அல்லது வேறு பொருட்களின் தாக்கத்தின் காரணமாக எமது உடலின் புறத்திலோ அல்லது அகத்திலோ நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தீங்கு விளைவிக்கக்கூடிய நிலையை அல்லது பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதை விஷம் என நாம் இனங்காணமுடியும்.



நச்சுப் பொருட்களை அல்லது நச்சுத்திரவங்களை குழந்தைகள், சிறுவர்களின் கைக்கெட்டாத இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்



## நஞ்சாவது எவ்வாறு?

நஞ்சு எனக் கூறியவுடன் எம் மனக்கண்ணில் தோன்றுவது ரசாயனத் திரவங்களே. ஆனால், அவை தவிர எமது சூழலில் காணப்படும் சில தாவரங்கள், விலங்குகள் என்பனவும் எமக்குத் தீங்கு விளைவிக்கக்கூடியவையே. சிலவேளைகளில் வீட்டை அலங்கரிப்பதற்காக வளர்க்கப்படும் தாவரங்கள், மலர்ச்செடிகள் கூட விஷமாகலாம். நச்சுத்தன்மை கொண்ட பல தாவரங்கள் இருக்கின்றன. இதனால், ரசாயனத் திரவங்களில் இருந்தும் நச்சுத்தன்மையான தாவரங்களில் இருந்தும் விஷ விலங்குகளில் இருந்தும் எம்மை பாதுகாத்துக்கொள்வதற்காக நாம் கவனமாக செயல்பட வேண்டும்.

## நஞ்சேற்றம் எவ்வாறு நடைபெறுகின்றது?

கீழே குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு வகையில் நஞ்சு நமது உடலில் ஏறலாம்.

- நஞ்சு தோலில் படுவதால்.
- சுவாசிப்பதால்.
- கண்ணில் படுவதால்.
- குடிப்பதால் அல்லது விழுங்குவதால்.

## விஷம் உடலில் ஏறியவுடன் ஏற்படும் மாற்றங்கள்

தொண்டையில், வாயில் எரிவு, வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி குறிப்பாக இரைப்பை நோய், வாயில் அல்லது மூக்கில் இருந்து சளி வெளிவரல், மூச்சு விடும் வேகம் குறைதல் அல்லது அதிகரித்தல், கண்களில் எரிவு, உடலில் வேதனை, நாடி விழும் வேகம் அதிகரித்தல் அல்லது குறைதல், தலைவலி, வலிப்பு, கண் பார்வை மங்குதல், மயக்கமடைதல், சுயநினை விழத்தல்.

## உடலில் நஞ்சேறுவதை தவிர்ப்போம்

நோய்க்குரிய ஏதாவது மருந்தைப் பாவித்தால் அதனை உரிய காலத்திற்குள் உரிய தடவைகள் எடுத்து முடிக்கவேண்டும். அத்துடன்,காற்று உட்புகாதபடி மூடிப்பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும்.

## ரசாயனத் திரவங்கள்

கிருமிநாசனிகள், பீடைக் கொல்லிகள் உள்ளிட்ட அனைத்து ரசாயனத் திரவங்களையும் அவற்றுக்குரிய போத்தல்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு அவற்றின் பெயர்களை எழுதி பாதுகாப்பாக வையுங்கள். குறிப்பாக ரசாயனத் திரவங்களை வேறு பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் ஊற்றி வைப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



கிருமிநாசனிகளைப் பயன்படுத்தும்பொழுது பாதுகாப்பான முறைகளைக் கையாள வேண்டும்

## ரசாயனத் திரவங்களை பாவிக்கும்பொழுது

ரசாயனத் திரவங்களைப் பயன்படுத்தும் பொழுது மூக்கு மற்றும் வாய் என்பனவற்றை மூடிக்கொள்வது மிக மிக அவசியமாகும். ரசாயனத் திரவங்களைப் பாவித்த பின் உடலை நன்கு கழுவிச் சுத்தப்படுத்தவும். அவை உடலில் பட்டால் சவர்க்காரமிட்டுக் கழுவவும். அத்துடன், ரசாயனக் கலவையின் லேபலில் குறிப்பிட்டுள்ள அளவுத்திட்டத்தின்படி கலவை செய்து அதில் குறிப்பிட்டுள்ளவாறு பயன்படுத்தவும்.

## தீங்கு விளைவிக்கும் உயிரினங்களை அழிக்கும்பொழுது

எமது வீடுகளில் எந்நேரமும் தொல்லை கொடுக்கும் கரப்பான் பூச்சிகள், ஈக்கள், வண்டுகள், எலிகள் உள்ளிட்ட உயிரினங்களையும் வேறு தீங்கு விளைவிக்கும் உயிரினங்களையும் ஒழிப்பதற்காக பயன்படுத்தும் மருந்துகளை இரவு நேரத்தில் மாத்திரம் பயன்படுத்தவும்.

## களஞ்சியப் படுத்தும்பொழுது

வீட்டிலுள்ள அனைத்து ரசாயனத் திரவங்களையும் மருந்து வகைகளையும் குழந்தைகள், சிறுவர்களின் கைகளுக்கு எட்டாத வகையில் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும்.

## அகற்றும்பொழுது

கிருமிநாசனிகள், நச்சுத்தன்மையான ரசாயனத் திரவங்களின் வெற்றுக் கொள்கலன்களை ஆங்காங்கே கண்ட கண்ட இடங்களில் வீசவேண்டாம். கண்ணாடிப் போத்தல்களாயின் உடைத்த பின்னர் குழிவெட்டிப் புதைக்கவும். பிளாஸ்டிக் மற்றும் தகரக் கொள்கலன்களை சிதைத்து பின் குழியில் போட்டு மூடவும். அட்டைப்பெட்டிகள், பக்கற்றுக்களை கிருமிநாசனிகளைப் பயன்படுத்தியபின் எரித்துவிடுங்கள். எரிக்கும்பொழுது அந்தப் புகையை சுவாசிக்கக்கூடாது.

## நச்சுத்தன்மையான ரசாயனத் திரவங்கள்

மதுசாரம் மற்றும் மதுசாரம் அடங்கியவை, கிருமிநாசனிகள் (பீடைக்கொல்லி,களைக் கொல்லி, நத்தைக்கொல்லி), ரசாயனப் பசளை வகைகள், மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோலியம் அடங்கிய திரவமும் பொருட்களும்,வாசனை திரவம், பிராணிக்கொல்லி மற்றும் சுத்தமாக்கிகள், வாகன எண்ணெய் வகை (பிரேக் ஒயில்),கழுவும் தூள், பூச்சு (பொலிஷி-டை வகைகள்), நுளம்புச்சுருள், அழகு சாதனப்பொருட்கள், பெற்றரித் துண்டுகள், வெடி மருந்து வகைகள் (தீப்பெட்டி, மத்தாப்பு, பட்டாசு), மருந்து வகை, பல்வேறு எண்ணெய் வகைகள் (கற்பூரம்,கற்பூர எண்ணெய்),



பழுதடைந்த
உணவு வகைகள்,
பூஞ்சண உணவு வகை,
காலாவதியான உணவு வகைகள்,
பக்றீரியா தொற்றிய உணவு வகைகள், சுவையூட்டிகள், நிறமூட்டிகள், சூழல் மாசடைந்த இடங்களில் உணவும் நீரும் எடுத்தல், அமில உணவை அலுமினியப் பாத்திரத்தில் வைத்தல், அமில உணவு வகைகள், உணவாக விலங்கினத்தை உண்டு நஞ்சாகுதல்.

இவை அனைத்தும் உணவு நஞ்சாவதற்கான வாய்ப்புகளாகும். நஞ்சேற்றத்திற்கு சிகிச்சை பெறுவதை விட நஞ்சேறாமல் தவிர்த்துக்கொள்வதே சாலச் சிறந்ததாகும்.

## நஞ்சேற்றத்திற்கு வழங்கும் முதலுதவி

நஞ்சுவகை உடலில் ஏறினால் அல்லது விஷத்தை சுவாசித்தால் அல்லது குடித்தால் அல்லது விஷ ஜந்துக்கள் தீண்டினால் நோயாளியை உடனடியாக வைத்தியரிடம் கொண்டு செல்லவேண்டும். அது வரையிலும் முதலுதவி அளிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.

- அச்சத்தைப் போக்க வேண்டும்.
- விஷமேறியவுடன் நோயாளிக்கு மரண பயம் எற்படும்.அதனால்,நோயாளியை அமைதிப்படுத்தி பயத்தைப் போக்கி ஓய்வாக வைத்திருக்க வேண்டும்.
- விஷமானது உடலின்



அறியாத தாவரங்கள், தெரியாத பழங்கள், குடிவகைகளை உட்கொள்வதையோ அருந்துவதையோ தவிர்த்துக் கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்களை தவிர்ப்போம்



நஞ்சேறினால் மேற்கொள்ளும் சிகிச்சையைவிட நஞ்சேறாமல் தவிர்த்துக்கொள்வது மிக இலகுவானதாகும். அதனால், விஷமேறக்கூடியவற்றிலிருந்து கவனமாக உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்



வெளிப்பாகத்தில் ஏறியிருந்தால் விஷத்தால் தோய்ந்த உடைகளை உடனடியாக கழற்றி உடலை சவர்க்காரம் இட்டு நன்றாகக் கழுவவேண்டும்.

✸ விஷம் கண்ணில் பட்டிருந்தால் கண்களை நன்றாகத் திறந்து ஓடும் நீரில் 15 நிமிடத்திற்கு நன்றாக கழுவவும். கண்களுக்கு எந்தவொரு மருந்து வகையோ, எண்ணெயோ அல்லது எந்தவொரு நீர்த்தன்மையான திரவப்பொருளையோ இடக் கூடாது.

✸ நோயாளி சுயநினைவிழந்தால் அல்லது மயக்க நிலையில் இருந்தால் அவரை இடது பக்கமாகத் திருப்பி அவரின் மேல்வாய் கட்டை (முகவாய் கட்டை)யை உயர்த்தி வையுங்கள். தலைக்கு எதனையும் வைக்க வேண்டாம். இவ்வாறு வைக்கையில் சுவாச மார்க்கம் திறப்பதால் இலகுவாக மூச்செடுக்க முடியும். சுவாசிப்பது இலகுவாகும். அத்துடன், சுவாசத்தொகுதிக்கு வாந்தி செல்வதையும் தவிர்க்கும். குருதிச்சுற்றோட்டம் முறையாக நடக்கும்.

✸ ஏதாவது விஷ வாயுவை சுவாசித்தால் நோயாளியை உடனடியாக அவ்விடத்தில் இருந்து அகற்றவேண்டும். வாந்தி எடுக்கச் செய்யவேண்டும். அதிகளவு நீரைக்குடிக்கக் கொடுக்கவேண்டும்.

✸ மண்ணெண்ணெய், பெற்றோல் மற்றும் பொற்றோலியப் பொருட்கள், பற்றரி அசிட் போன்ற அமிலம், எரிவை ஏற்படுத்தக்கூடிய ரசாயனத் திரவத்தை அருந்தியிருந்தால் வாந்தி எடுக்கச் செய்யவேண்டாம். குடிப்பதற்கு எதுவும் கொடுக்க வேண்டாம்.

✸ சுயநினைவு குறைந்திருந்தால், சுயநினைவற்றிருத்தல் வலிப்பு ஏற்பட்டால் வாந்தி எடுக்கச் செய்ய வேண்டாம்.

✸ நஞ்சேற்றத்திற்கு காரணமான பொருட்கள் அல்லது திரவம் அடங்கிய பாத்திரத்தை அல்லது கொள்கலனை நோயாளியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று வைத்தியரிடம் காட்டவேண்டும். அக்கொள்கலன் அல்லது பாத்திரம் வெறுமையாக இருந்தாலும் கொண்டு செல்ல வேண்டும்.

✸ விஷ ஜந்துக்கள் கடித்திருந்தால் அந்த இடத்தை சவர்க்காரம் இட்டு ஓடும் நீரில் நன்றாகக் கழுவவேண்டும். ஐஸ்கட்டிகளை வைப்பதன்மூலம் நோயாளியின் வேதனை குறைவடையும்.

✸ பாம்பு தீண்டியிருந்தால் அதற்கான சிகிச்சைக்கு வைத்தியரிடம் நோயாளியைக் கொண்டு செல்லும்பொழுது முடியுமாயின் கடித்த பாம்பையும் எடுத்துச்செல்லவும். அப்பொழுது கடித்த பாம்பினையும் அதன் இனத்தையும் வைத்தியர் அறிந்து அதற்கேற்ற சிகிச்சை செய்ய இலகுவாக இருக்கும்.

## 2007 ஆம் ஆண்டில் நஞ்சேற்றம் குறித்த புள்ளி விபரம்

| நஞ்சேறிய பொருள் | வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர் | மரணமடைந்தோர் தொகை |
|---|---|---|
| 1. கிருமிநாசனி | 18180 | 1270 |
| 2. மருந்து வகை | 18325 | 151 |
| 3. விஷப் பாம்பு | 36861 | 134 |
| 4. ஏனையவை (ரசாயனத் திரவம், தொழிற்சாலைத் திரவம், களைக்கொல்லி) | 17686 | 230 |

## பாம்பு தீண்டுவதற்கு இலக்காகாமல் தவிர்த்துக் கொள்ளல்

✸ பொதுவாக மக்கள் வாழும் இடங்களுக்கு அருகில் பல்வேறு பாம்புகளைக் காணலாம். அத்தோடு, கருந்தேள் (நட்டுவக்காலி) இத்தகைய விஷ ஜந்துக்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அறிந்து அதனை கடைப்பிடித்தால் விஷ ஜந்துக்களின் கடியிலிருந்தும் அதனால் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்தும் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

✸ அதிகமாக பாம்பு அல்லது ஏனைய விஷ ஜந்துக்கள் நமது கால்களிலேயே தீண்டுவதுண்டு. அதனால், பாம்புகள் இருக்கக்கூடிய இடங்களில் நடமாடும்பொழுது அல்லது வேலை செய்யும் பொழுது 'பூட்ஸ்' சப்பாத்துக்களை அணிந்து கொள்வதோடு நீளமான கால்சட்டையை அணிவதும் நல்லது.

✸ பாம்புகள் இருக்கக்கூடிய பிரதேசங்களில் நடமாடும் பொழுது தடியொன்றைப் பாவியுங்கள்.

✸ இரவு நேரங்களில் வெளியில் நடமாடும் பொழுது அல்லது பயணிக்கும்பொழுது 'டோர்ச் லைட்' அல்லது தீப்பந்தம் போன்ற வெளிச்சத்தைத் தரும் சாதனத்தைக் கொண்டு செல்லுங்கள்.



கிருமிநாசனி, ரசாயனத் திரவம் மற்றும் மருந்து வகைகளை லேபல் இட்டு அதற்குரிய போத்தல்களில் வைத்து பாதுகாப்பாக மூடி வைக்கவும்

✸ பாம்புகள் அல்லது விஷ ஜந்துக்களுக்கு மெல்லிய நில அதிர்வுகளைக் கூட உணரும் திறன் உண்டு. அதனால், அத்தகைய இடங்களில் பயணிக்கும் பொழுது நிலத்தில் அதிர்வுகள் ஏற்படுத்தும் விதத்தில் அழுத்தமாக கால் வைத்து நடக்கவும்.

✸ வீட்டைச் சுற்றிப் பற்றைக்காடுகள், புதர்கள், அநாவசிய செடிகள் இருந்தால் அவை அனைத்தையும் முற்றாக வெட்டிச் சுத்தப்படுத்த வேண்டும்.

✸ வீட்டைச் சுற்றி சுத்தமாக வைத்திருங்கள். விறகுக் குவியல், கற்குவியல் போன்றவற்றை அகற்றிவிடுங்கள்.

✸ வீட்டைச் சுற்றி அல்லது வீட்டினுள் எலிகள், தவளைகள், பல்லிகள் போன்ற உயிரினங்கள் பெருக விடாமல் அத்தகைய இடங்களில் உள்ள குப்பைகூளங்கள், கழிவுகள் என்பனவற்றை அகற்றிச் சுத்தப்படுத்துங்கள்.

✸ பாம்புகள் குறித்த நல்ல அறிவு இருந்தால் மாத்திரம் அதனை விரட்டுவதற்கான செயலில் இறங்கவும்.

## ரசாயன நஞ்சற்ற இலங்கை

உலகில் அனைத்து நாடுகளிலும் இந்த நஞ்சேற்றம் பொதுவாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதனால், ஐக்கிய நாடுகள் சபை இந்நிலையை தவிர்த்துக் கொள்வதற்கு பல்வேறு வேலைத்திட்டங்களை செயல்படுத்துகின்றது. அதற்காக சர்வதேச வாரம் ஒன்றை குறிப்பிட்டுள்ளது. அதன்படி, மே மாதம் 26 ஆம் திகதி முதல் ஜூன் 1 ஆம் திகதி வரை உள்ள வாரம் 'தேசிய நஞ்சேற்றத்தை தவிர்க்கும் வாரம்' என பெயரிடப்பட்டுள்ளது. 'கிருமிநாசனி விஷமற்ற இலங்கை' என்பதே இம்முறை அதன் தொனிப்பொருளாகும்.





விஷம் அருந்தினால் அல்லது விழுங்கினால் இடதுபக்கம் நோயாளியைத் திருப்பி சற்றுத் தலையை உயர்த்தவும்



விஷமேறக் காரணியாக அமைந்த திரவத்தின் கொள்கலனுடன் வைத்தியரை அணுகவும்



விஷத்தால் தோய்ந்த உடைகளை நீக்கி உடலை சவர்க்காரம் இட்டு நன்றாய் கழுவவும்



கண்களில் நஞ்சு பரவியிருந்தால் ஓடும் நீரில் 15 நிமிட நேரம் கண்களை நன்றாகத் திறந்து கழுவவேண்டும்

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'ரொட்டோமெக்' போட்டியில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகள்!

(கடந்தவார தொடர்ச்சி)

**தொப்பிகள் வெற்றியீட்டியோர்**

டி.மலிந்த-இரத்தினபுரி, வை.கருணாரத்ன-பாணந்துறை, சி.விமல்ரதன-ஹெயந்துவ, பி.கருணாரத்ன-கண்டி, சி.சந்தமாலி-தலவதுகொட, கே.சிவகுமார்-பதுளை, ஏ.புஷ்பகுமார-கந்தேவத்த, எம்.பெர்னான்டோ-ராகம, கே.வீரசிங்ஹ-குளியாப்பிட்டிய, எல்.ஹக்-முருதலாவ, ஆர்.வீரசூர்ய-மாத்தறை, வை.தாவீது-மாதம்பே, எஸ்.சிரந்த-கந்தளாய், என்.காரியவசம்-கண்டி, டி.திஸாநாயக-ஹிங்குராங்கொட, ஐ.பிரியங்கிகா-பிபிலே, கே.தர்மஸ்ரீ-வாதுவ, இ.மல்ஷானி-மஹரகம, பி.குமார-ஹொரவப்பொத்தான, டி.மதுஷான்-மதவாச்சி, பி.பத்மஸ்ரீ-கிரியல்ல, எல்.அபேவிக்ரம-கம்பஹா, சி.பண்டார-பதுளை, டி.திலகரத்ன-மஹகம, பி.சுலோச்சனி-ஹோமாகம, ஏ.சசிந்தி-பன்னிப்பிட்டிய, ஆர்.அனுபமா-உருகம்முவ, நடாலி வைட்-கட்டுகஸ்தோட, சஞ்சீவனி-வெல்மில்ல, ஜி.பெரேரா-பாணந்துறை, எம்.சிந்துஷன்-கொழும்பு-13, எம்.யூசூஃப்-கண்டி, எம்.வீரஸ்ரீ-கம்பஹா, எஸ்.பெர்னான்டோ-பாணந்துறை, எல்.வரன்-அக்கரப்பத்தனை, சி.சந்தருவன்-பதுளை, எம்.அக்ரம்-மல்வான, எம்.சமரவீர-ரக்வானை, எம்.புபுதினி-பன்னிப்பிட்டிய, எஸ்.சங்கல்ப-ஹம்பாந்தோட்ட, எஸ்.கலகெதர-வாகே, சி.விதான-அங்கொட, என்.லொகுகமகே-மாத்தறை, பி.நவகமுவ-பாணந்துறை, ஆர்.விமலதாஸ-மாகொல, எஸ்.சந்தருவன்-காலி, ஏ.பர்வின்-அக்குறணை, எஸ்.மதுஷான்-மல்வான, அமினா-கொழும்பு-12, எம்.கியாஸ்-புத்தளம், எஃப்.ஹக்-கொழும்பு-15, ஐ.ரத்மாலி-பானகமுவ, என்.நஸார்-கல்கமுவ, கே.பண்டார- கேகாலை, எம்.மன்ஸீர்-கொழும்பு-15, யு.சிரஞ்சனா-ரத்னபுர, ஏ.கருணாசேன-கண்டி, என்.தயானந்த-கெடஹெட்ட, ஆர்.விஜேஸ்ரீ-பதுளை, சி.மிஹிராஜ்-தெளிஜாவில, எச்.ராஜபக்ஷ-கடுவெல, எஃப்.பெரேரா-கல்கிசை, டி.சத்மினி-பண்டாரவளை, என்.அப்துல்லா-பசறை, ஏ.இந்திகா-பதுளை, எல்.மதுஷானி-கல்கமுவ, ஆர்.மல்ஷானி-இம்புல்கொட, டி.வணிகசேகர-பாணந்துறை, பி.சங்கல்ப-எம்பிலிப்பிட்டிய, எஸ்.குமார-ஹபுருகல, வி.பெரேரா-மொரட்டுவ, எஸ்.கருணாதிலக-இப்பாகமுவ, டி.குமார்-கணேசபுரம்.

கே.நதீஷா செவ்வந்தி-லப்பல, எச்.ருவனி மல்ஷா-மிரிஸ்ஸ, எம்.புஜானி-கட்டுநாயக்க, ஏ.மல்கி மகேஷிகா-பொல்கஹவல, கே.கருணாதாஸ-வாரியபொல, எம்.இன்ஃபாஸ்-அகுறணை, ஏ.அஸங்க சஜீவா-கணேமுல்ல, கனிஷ்கா நிலுபுல்-ஹொரம்பல்ல, எஃப்.முபீனா-மாவனல்ல, நிர்மனி தஸாநாயக்க-கண்டி, கே.தில்ஹார பெர்னான்டோ-கட்டுநெரிய, ஏ.தருணி மந்தினு-மாத்தறை, எல்.சந்திமா சில்வா-களனி, என்.தாரகா பீரிஸ்-மொரட்டுவ, ஆர்.பமோத் டி சில்வா-மாத்தறை, எம்.இன்ஸாஃப்-அகுறணை, எல்.நிரோஷனா-நுகேகொட, எம்.ருஷல் மதுக-ஸ்ரீபுர, யு.சம்பத்-பிபிலியாவல, ஐ.பகீர் மார்கர்-கொழும்பு-07, பி.சாலிதா மதுசங்க-மந்தைவெளி, யு.ஹன்சி பாக்யா-மஹரகம, பி.குணசேகர-அனுராதபுரம், டி.சிமக் அஹமட்-அகுரஸ்ஸ, கவின்ந்யா ஜயதிலக-கெப்பிட்டிபொல, எம்.கிருஷான் விதுரங்க-வடக்கு மாக்கொல, சம்பா குமாரி-தெக்கட்டன, நயனகா ஜெயலத்-பாதுக்க, எம்.அஷிக்-அகுறணை, கே.தேவிந்த உதயஜீவா-பண்டாரகம, டபிள்யூ.மதுபாஷினி-பண்டாரகம மேற்கு, வி.வாசனா-மிஹிந்தல, எம்.இன்ஃபாஸ்-காலி, நதீஷா ஜயவர்தன-கோட்டே, கே.திலின விதுனுவன்-அம்பலங்கொட, எஸ்.சபுமல் டயஸ்-கண்டி, சி.பிரியதர்ஷினி-இமாதுவ, ஹசிந்து டக்சிதா-களுத்துறை வடக்கு, நிசால் ரவிந்து-களுத்துறை தெற்கு, சூரி ராஜபக்ஷே-பன்னிப்பிட்டிய, திமானி ராஜபக்ஷே-ஹோமாகம, எஸ்.நேத்ரா மகாநாம-ஹிக்கடுவ, பி.பதியா பண்டார-குருணாகலை, எம்.ரிகாஸ்-கொழும்பு-15, கிஷானி கெப்பிட்டிபொல-தெல்தெனிய, எஸ்.உஷாந்ய பண்டார-நிக்கவரட்டிய, எம்.செவ்வந்தி ரத்நாயக-கொடகவலே, முஹம்மட் ஃபவ்மி-கொழும்பு-15, எச்.சதுரங்க டி சில்வா-ரத்மலான, அப்துல்லா அனீஸ்-வெலிகம, டி.கவிஷா பாக்யா-நாபத, ஐ.நிஷாதி ஜயசிங்ஹ-மாத்தளை, எஃப்.ருஷாத ஃபஃமி, கொழும்பு-10, எஸ்.அமரசிங்ஹ-பிலிமதலாவ, கலித் மவ்லான-கொலன்னாவ, நிர்மனி தஸநாயக்க-கண்டி, எம்.ஹகீம்-பூஜாபிடிய, எஸ்.குமுது குமாரி-மதுகம, டி.கவிஷான் பாக்யா-நாபட, ஜி.சுகிர்ஷன்-புசல்லாவ, சஷிகலா செவ்வந்தி-கடுவெல, எஃப்.சஃபாரி-அகுறணை, எஸ்.சதுரங்க பெரேரா-மஹரகம, சி.துலிகா-பண்டாரவளை, ஸ்ரீயானி தமயந்தி-கம்பஹா, ஜி.தனிந்து ரவிஹன்ஸா-தேவி நுவர, டி.துஷார சஞ்சீவ-வெயாங்கொட, எம்.ஹசன்-கம்பளை, எம்.யூசூஃப்-கண்டி, ஆர்.நதீஷா பியூமலி-மெனுவங்கொட, எம்.கீர்த்தனா-மல்லாகம், எம்.ஆஷிப்-பாணந்துறை, விஜிதானந்த தேரோ-ரத்னபுர, எஸ்.சஞ்சீவன்-கொழும்பு-15, டபிள்யூ.அத்தபத்து-அனுராதபுரம்.

பி.அமென்டா கௌராணி-பாணந்துறை, ஹசினி அமென்டா-மஹரகம, இந்துனி ஜித்மா-பதுளை, எம்.ஸஹீன் ஹமீத்-வத்தளை, எஸ்.ஈ.பெரேரா-கொழும்பு-05, எஸ்.பராக்கிரம-டனோவிட்ட, எம்.ஜயந்தி சுதர்ஷினி-அகுரம்பொட, கே.தில்ஷான்-குருணாகலை, எஸ்.சஜேரவன்-கொழும்பு-15, எஃப்.ரிஸ்னா-அகுறணை, பி.ராகுலன்-மட்டக்களப்பு, எம்.மனாஸிர்-உலப்பனை, கே.புலஸ்பதி தர்ஷன-ஹோமாகம, எம்.சௌரஃப் இஸாக்-காலி, ஜி.தேவிகா மதுஷானி-இமாதுவ, ஜி.அமில லக்ருவன்-இமாதுவ, எஸ்.தருஷி ருவங்கா-களுத்துறை, டன்சில் சந்ரபால-சரஸ்வதிபுர, ச.மதுஷிகா-பூகொட, ருவந்தி யசோதா-பெம்முல்ல, எம்.ஜேசன்-புத்தளம், ஜே.தனுஷ்கா-அங்கொட, ரேணுகா நிரஞ்சனி-வாதுவ, யோவான் அமரபந்து-புறக்கோட்டை, டி.சஷினி மலிஷா-பொரலஸ்கமுவ, அஞ்சு சதுர்யா-ஹக்மன, நவீன் தினேஷ்கா-கொழும்பு-05, ருச்சிகா நாணயக்கார-கம்புருகம்முவ, எஸ்.லியனயாபா-தனமல்வில, ஜே.இஷான் நவீந்ரா-வாதுவ, ஜே.துலஞ்சலி-பதுளை, எம்.பைசில்-மொன்னகுலம, கு.சமித்தி ரந்துல-பாணந்துறை, எம்.நெத்னிமி சம்மிகா-தெல்கொட, அப்துல் ரஹ்மான்-வெல்லம்பிட்டி, எம்.தபித்-கொலன்னாவ, பி.கௌசல்யா சாமலி-எம்பிலிப்பிட்டிய, ஆன் லக்னி பெர்னான்டோ-வென்னப்புவ, ஏ.பிரியங்கா-தெய்யந்தர, எம்.ஃபஹ்மி-தீகல, அமில நுவன் பெரேரா-பிலியந்தல, திஷார ருக்ஷான்-வாதுவ, எம்.காமினி மடநாயக்க-கம்பளை, சுவர்ண விமலசூர்ய-பாணந்துறை, ஏ.கலிந்து கஸ்தூரிகா-ரதவான, ஜி.ரஜித் நிலங்க-கபுகொட, மல்ஷா நவீன் பெரேரா-பதுளை, பி.பவித்ரா மதுஷானி-கேகாலை, மிலன் சசங்கா கமகே-பொரலஸ்கமுவ, த.திடனா கவ்சிலு-வாதுவ, மு.சலின்-வவுனியா, சஹான் விஸ்வ பெர்னன்டோ-தோடுவாவ, கணேசன் துலக்ஷன்-வவுனியா, கே.கலிமனலன்-பூணாகலை 03, எம்.தரங்க செனரத்-பொல்பிதிகம, அனுதி உத்சரி-அகுணகொலபெலச, எம்.ரெகின சில்வா-சிலாபம், ப்ரமோதி புளத்சிங்கள-கடுகொட, ததிஷியா மதுமாலி-நிகதலுபொத, மதுனிகா சத்சரனி-மஹரகம, பாத்திமா சஸ்னா-களுத்துறை தெற்கு, இஷ்ரஃப்கா ப்ரியமந்தா-தெகடன, எம்.வினோத் ஹசங்க-கிரிபத்கொட, நயோமி ரஞ்சுல பண்டார-பொல்கஸ்விட, பி.கொசிகன்-வவுனியா, சஷினி ஹசந்திகா-பதுளை, தில்சார விமுக்தி பெரேரா-கடுபெத்த, எஸ்.அபேக்ஷா உமாலி-ஹெய்யந்துவ, எம்.மபாஸ்-உலப்பனை, ருஷ்தா ரிஸ்வி-உகுவளை, எம்.பர்ஸான்-தர்கா நகர், ஹஸினி அமென்டா, திலன கவ்சிலு தர்மசிரி, சமிதி ரந்துல குணதிலக.

(முற்றும்)

# குட்டி சகோதரனின் சாகசம்




வீரதீரச் செயல்களைப் பிரதிபலிக்கும் கதைகளைக் கேட்க நாம் ஆவல் கொண்டிருக்கின்றோம். அதிலும் சின்னஞ்சிறிய வீரர்கள் பற்றிய கதைகள் எப்பொழுதுமே நம் எண்ணங்களை விட்டு நீங்குவதில்லை. அரிதாக நிகழும் இவ்வாறான சம்பவங்கள் நீண்டகாலப் புகழை ஈட்டிச் செல்கின்றன. பெரியவர்கள் செய்யும் சாகசங்களை விட சின்னஞ்சிறியவர்களின் சாகசங்களே வெகுவாகப் பேசப்படுகின்றன. அத்தகைய ஒரு குட்டிச் சகோதரன் பற்றிய கதையே இது.

தனது உயிரையும் துச்சமென மதித்து, மற்றவர்களின் உயிரைக் காப்பாற்றிய சிறிய வீரன்தான் சந்தகெலும். ஒன்பது வயதான தினேஷ் சந்தகெலும், கெமுனுபுர மகா வித்தியாலயத்தில் 4 ஆம் வகுப்பில் கல்வி கற்கின்றார். பெற்றோரின் அன்பைப் பெற்ற சந்தகெலும் மிகவும் சுறுசுறுப்பானவர். சவால்களை எதிர்கொண்டு வெற்றி கொள்வதில் திறமை வாய்ந்தவர்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சந்தகெலும் ஞாயிறு அறநெறிப் பாடசாலையில் இருந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் மஹியங்கனை, கெமுனுபுர பிரதேசத்தில் அமைந்துள்ள ஆற்றைக் கடந்தே தனது வீட்டை வந்தடைய வேண்டும். இவ்வாறு வீடு நோக்கி வந்து கொண்டிருந்த சந்தகெலும், தனக்கு முன்னால் பயணித்த டிரெக்டர் வண்டி ஆற்றில் விழுந்து மூழ்குவதையும் ஆற்றில் விழுந்தவர்கள் கைகளை உயர்த்தி உயிருக்காகப் போராடுவதையும் கண்டுள்ளார். இதனைக் கண்ட சந்தகெலும் தனது சைக்கிளை ஒருபுறம் வீசியெறிந்து விட்டு ஆற்றில் குதித்துள்ளார். தன்னால் அவர்களைக் காப்பாற்ற முடியுமா? முடியாதா? என்பதனைப் பற்றி சற்றும் சிந்திக்காமல் அவர் ஆற்றில் குதித்து விட்டார்.

அன்று வழமைக்கு மாறாக ஆற்றில் நீர் மட்டம் உயர்ந்திருந்தது. ஆற்றின் நீரோட்ட வேகமும் அதிகமாக இருந்தது. அவற்றைப் பற்றி சற்றும் பொருட்படுத்தாத அந்த சிறிய சகோதரர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றி, அவர்களை ஒவ்வொருவராகக் கரைக்கு இழுத்து வந்துள்ளார். அவர்களில் ஒரு தாயும் இரு பிள்ளைகளும் டிரெக்டர் வண்டி ஓட்டுநரும் உள்ளடங்குகின்றனர். இவ்வாறு நால்வரையும் கரை சேர்த்த சந்தகெலும், மேலும் ஒருவர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட வண்ணம் உதவி கோரி குரல் கொடுப்பதை அவதானித்துள்ளார். அவரையும் காப்பாற்ற தான் எத்தனித்தபோதும் நீரில் அவர் மிக வேகமாக அடித்துச் செல்லப்பட்டதால் அப்பகுதிக்குச் சென்று அவரை மீட்டு வர முடியாமல் போனதாகவும் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்தில் உயிர் தப்பியவர்கள் தம்மை அபாய நிலையிலிருந்து காப்பாற்றிய சந்தகெலுமை கடவுளாகக் கருதுகின்றனர். இவர் அப்பகுதி வாழ் மக்களின் அன்பினை மாத்திரமன்றி, முழு நாட்டினதும் கௌரவத்தையும் பாராட்டினையும் இந்தக் குட்டி வீரன் பெற்றுள்ளான்.

'அன்று வழமைக்கு மாறாக ஆற்றில் நீர் மட்டம் உயர்ந்திருந்தது. ஆற்றின் நீரோட்ட வேகமும் அதிகமாக இருந்தது. அவற்றைப் பற்றி சற்றும் பொருட்படுத்தாத அந்த சிறிய சகோதரர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தவர்களைக் காப்பாற்றி,அவர்களை ஒவ்வொருவராகக் கரைக்கு இழுத்து வந்துள்ளார்'

இந்த சிறுவனின் வீரச் செயல் சமூகத்திற்கு ஒரு படிப்பினையாகும். நான்காம் வகுப்பில் கற்கும் இவர், நம் அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார். தேவையேற்படும் போது மற்றவர்களுக்கு உதவுவதிலும் அவர்களின் சுகதுக்கங்களில் பங்கு கொள்வதுமே வாழ்நாட்களில் நமக்குக் கிடைக்கின்ற மிகப்பெரிய பாக்கியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். பணத்தால் மாத்திரம் தான் உதவி செய்யலாம் என்று நினைக்கலாகாது. உதவி என்பது சாதி-பேதம் அற்ற, சிறியவர்-பெரியவர் என வயது வித்தியாசமின்றி நம்மால் செய்யக்கூடியது. இதனை குட்டி சகோதரர் எம் அனைவருக்கும் உணர்த்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் வெற்றி பெற வழிகாட்டும் 5 எஸ் [5S] விதி

**கல்வியில் முன்னேற எவ்வளவு முயற்சி செய்தாலும் அதற்குரிய சூழல் இல்லாவிட்டால் அது சிரமமான காரியமாகும். பாடசாலை, வீடு அல்லது இருக்கும் இடத்தில் அனைத்தும் ஒழுங்காக இல்லாவிட்டால் வெறுப்பு ஏற்படும் நிலைதான் உருவாகும். அதனால், எமது அடைவுகளில் நாம் முன்னேற்றம் காண அதற்குரிய நுட்பமுறையாக இருப்பது 5S முறையாகும்.**




## ஆரம்பம்

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஜப்பான் குறிப்பிடத்தக்க அளவுக்கு கைத்தொழிலில் முன்னேற்றம் கண்டது. அந்த வளர்ச்சி இன்றும் தொடர்கின்றது. இந்த வெற்றியின் பின்னணி ஐந்து விதி எனும் சித்தாந்தமாகும்.

## 5S முறையின் முக்கியத்துவம்

✱ மிகவும் விரைவாக செயற்படுத்தக் கூடியது.

✱ அனைவராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியது.

✱ எந்த இடத்திற்கும் பொருந்தும் தன்மை.

✱ குறைந்த செலவு.

✱ 5 S முறை என்பது உற்பத்தித்திறனை அல்லது பிரதிபலனை அதிகரிக்கச் செய்கின்ற தொழில்நுட்ப முறையாகும்.

## செய்ரி



தேவைப்படும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவற்றை அடையாளம் கண்டுகொள்ளல். இதனை பகுதி பகுதியாக செயற்படுத்தலாம். பாடசாலையில் மாணவ, மாணவியருக்கும் வகுப்பறைக்கும் கூட இந்த 5S முறையை பிரயோகிக்கலாம். இதில் உங்களால் மிகவும் அத்தியாவசியமானது என்று கருதுபவற்றை வேறுபடுத்திக் கொள்ளவேண்டும். அவற்றை மூன்று பிரிவுகளாக அடையாளப்படுத்திக் கொள்ளமுடியும்.

✱ பொருத்தமற்ற மதிப்பு இல்லாதவற்றை அப்புறப்படுத்திக் கொள்ளமுடியும்.

உ+ம்: ஏற்கனவே பயன்படுத்திய, துருப்பிடிக்கும் நிலையில் உள்ள பொருட்கள், காகிதங்கள், கடிதங்கள் போன்ற நாம் கழிவுப் பொருள் என்று கருதுபவையாகவும் இருக்கலாம்.

✱ ஆனாலும் எமக்குத் தேவையற்ற, உதவாத சில பொருட்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருக்கலாம்.

உ+ம் : பழைய புத்தகங்கள், போத்தல்கள், பழைய இரும்பு, உலோகங்கள், மரத் தளபாடங்கள் போன்றவற்றை விரைவாக விற்பனை செய்து பணமாக்கிக் கொள்ளுங்கள். இதன் மூலம் நமக்குப் பொருத்தமற்றவை அப்புறப்படுத்தப்பட்டு அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம் பயன்பாட்டுக்கு உதவுவதாக அமைவதோடு பொருளாதார நன்மையும் கிடைக்கின்றது.

✱ மதிப்பு இல்லாததும் அப்புறப்படுத்த முடியாததுமானவை.

சில வகையான பொருட்கள் பொருளாதார ரீதியாக அல்லது பணரீதியாக முக்கியத்துவம் இல்லாவிட்டாலும் நினைவுச் சின்னங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. இவை சுற்றாடலுக்கு அழகூட்டுபவையாகவும் இல்லாதிருக்கலாம். அதனால், இவற்றை சுற்றாடலைப் பாதிக்காத வகையில் ஒதுக்கமாக வையுங்கள்.

இவற்றில் பழைய புத்தகங்கள், ட்ரங் பெட்டி, சூட்கேஸ், காற்றாடி, கலைப் பொருட்கள் போன்றன அடங்கும்.

இவ்வாறு தேவையற்ற பொருட்களை நீக்கினால் மீதமாக வருவது தேவைப்படும் அவசியமான பொருட்களாகும்.

✱ அடிக்கடி பயன்படுத்துபவை

இவ்வகைப் பொருட்கள் பயன்படுத்துபவரின் அருகில் இலகுவில் எடுக்கக் கூடியதாக இருக்கவேண்டும். (பேனா, பென்சில், அன்றாடம் தேவைப்படும் புத்தகங்கள், வேறு உபகரணங்கள்)

✱ அடிக்கடி பயன்படாதவைகள்

அடிக்கடி தேவைப்படாதவைகளை சற்று தொலைவில் வைக்கலாம். (சுத்தரிக் கோல், டிபெக்ஸ், காகிதங்கள்). இதன்படி எமது சுற்றுப்புறத்தில் உள்ள பொருட்களை வகைப்படுத்திக் கொள்ளமுடியும். 'செய்ரி' என்ற இந்த முறையில் பொருத்தமற்றவை நீக்கப்பட்டு தேவைப்படும் பொருட்கள் அடையாளம் காணப்படுகின்றன.

## செய்ரோன் (ஒழுங்குபடுத்தல்)



தேவைப்படும் பொருட்களை இலகுவில் பயன்படுத்தக் கூடியதாக முறையாக ஒழுங்குபடுத்தி வைத்துக்கொள்ளல் இதன் அர்த்தமாகும். பாடசாலை அல்லது அலுவலகங்கள் அல்லது வீட்டில் நமக்கு அடிக்கடி தேவைப்படும் பொருட்களை முறையாக வைத்துக் கொள்வதால் ஒழுங்கான முகாமைத்துவம் ஏற்படுகின்றது. இதனால், கால விரயம், வள விரயத்தைத் தடுத்தல் என்பன சாத்தியமாக இருக்கும். அத்தோடு, ஒவ்வொரு பொருளையும் வைப்பதற்கு அதற்கென்ற இடம் ஒதுக்கப்படவேண்டும். ஒழுங்குபடுத்தி வைத்துள்ளவற்றை இலகுவில் அடையாளம் காணும் வகையாக அவற்றின் மீது பெயர் குறிப்பிடல் அவசியம். அவற்றை இலகுவில் எடுக்கக் கூடியதாகவும் அந்தந்தப் பொருள் தேவைப்படுபவருக்கு அருகில் வைக்கப்படவேண்டும். இதன் மூலம் தேவையானவற்றை தேடுவதற்காக செலவிடும் நேரத்தை சிக்கனப்படுத்தலாம்.

## செய்சோ (சுத்தம்)



இருக்கும் இடத்தில் (அலுவலகம், வீடு, வகுப்பறை) சிறிதளவேனும் தூசு இல்லாமல் சுத்தமாக வைத்திருத்தல். பின்வரும் முறைகளைக் கையாள்வதால் இதனைப் பேணமுடியும்.

✱ தினமும் குறைந்தது 5-10 நிமிடங்களாவது சுத்தப்படுத்துவதற்காக செலவிடல்.

✱ பாடசாலையாயின் ஒவ்வொரு வேலைக்குப் பொறுப்பாக (தலைவர்) ஒருவரை நியமித்துக் கொள்ளுங்கள்.

✱ குறிப்பிட்ட இடத்தின் சுத்தம் பற்றி அடிக்கடி கண்காணிப்புச் செய்யவேண்டும்.

✱ பாடசாலையில் சுத்தப்படுத்துவதற்கான தினத்தை ஒதுக்கி கூட்டுச் செயற்பாட்டின் ஊடாக அனைவரதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளல்.

## செய்கென்சு (ஒத்துப்போதல்)



முன் குறிப்பிட்ட மூன்று வழிகளிலும் மேற்கொள்ளப்படுவது முறையானதும் ஒழுங்கானதுமான முன்னேற்றத்தை நோக்கிய நகர்வாகும். இங்கு முக்கியமானதாக அமைவது தொடர்ச்சியாக இம்மூன்று செயற்பாடுகளையும் மேற்கொள்வதல்ல. மாறாக, தொடர்ச்சியாக முன்னேறுவது அல்லது அபிவிருத்தியடைவது என்பதே முக்கியமானதாகும். செய்ரி, செய்தோன் மற்றும் செய்கோ ஆகிய மூன்று வழிகளிலும் ஏற்படுத்திக் கொண்ட நிலைமையை விட மேலும் முன்னேற்றமான நிலையை அடைவதே செய்கென்சு செயற்பாடாகும்.

இதில் முதல் இரண்டு வழிகளிலும் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தித் தேவையானவற்றை ஒழுங்காக வைத்து பாடசாலையில் மிகவும் மனோரம்யமான சூழலை ஏற்படுத்திவிட்டோம் என்று கருதுவோம். 'செய்கென்' மூலம் அந்த நிலையை மேலும் ஒருபடி மேல் கொண்டு சென்று முன்னேற்றுவதற்கான செயற்பாடுகளை விஸ்தரிக்கலாம்.

பாடசாலை வளவுக்குள் அழகான முறையில் மலர்கள் பூத்துக்குலுங்கும் கண்கொள்ளாக் காட்சியாக அமையும் பூச்செடிகளைக் கொண்ட பூச்சாடிகளை வைத்தல். அம்புக்குறிகள் மூலம் செல்ல வேண்டிய இடங்களையும் பிரிவுகளையும் வகுப்பறைகளையும் காட்டுதல் போன்ற முறைகளைப் பின்பற்றி இதனை மேலும் விருத்தி செய்யலாம்.

## சித்துகே (நுட்பம்)



இந்த 5S முறை தொடர்பாக ஏனையவர்களை அறிவூட்டல். இதனை நடைமுறைப்படுத்துவதையும் தொடர்வதையும் பழக்கத்தில் கொண்டு வரச் செய்தல்.

✱ உங்களோடு இணைந்து செயற்படுபவர்களை அன்புடன் அணுகுதல்.

✱ நல்ல முறையில் பிறரின் வேண்டுகோளை, தேவைகளை, சொல்பவைகளைச் செவிமடுத்தல்.

✱ சட்டத்தை மதிக்கக்கூடியவராக இருத்தல்.

✱ நேரத்திற்கு இயங்குதல்.

✱ தொழில்புரியும் இடத்தை எப்போதும் சுத்தமாகவும் அழகு தரும் விதத்திலும் வைத்துக் கொள்ளல்.

இந்த 5S முறையானது பாடசாலைக் கல்வி மேம்பாட்டுக்கும் அபிவிருத்திக்குமான உந்துசக்தியை வழங்குவதற்கு உகந்த முறையாக கையாளப்படுகின்றது. அதேநேரம் வீடுகள், ஏனைய நிறுவனங்கள், கைத்தொழில் நிலையங்கள் என ஒட்டுமொத்தமாக ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் பொருளாதார எழுச்சிக்கும் வழிவகுக்கக்கூடிய நுட்பமுறையாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.


**அமீர் ஹுஸைசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானா





முற்காலத்தில் பிரித்தானிய பேரரசின் கீழ் இருந்த நாடுகளில் ஒன்று தான் கானா. அப்போது இந்நாட்டை 'கோல்ட்கோஸ்ட்' என அழைத்தனர். மேற்கு ஆபிரிக்காவிலேயே சுதந்திரம் பெற்ற முதல் நாடு இதுவாகும். முன்னாள் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கொஃபி அனானின் தாயகம். இது 'அஷாந்தி' கலாசாரத்திற்குப் பெயர் பெற்ற நாடாகும். வெப்பமான காலநிலையைக் கொண்ட கானா தேசம் 10 மாகாணங்களையும் 138 மாவட்டங்களையும் கொண்டது.

## அமைவிடம்

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாகிய கானா,மேற்கில் ஐவரிகோஸ்ட் நாட்டையும் வடக்கில் புர்கினா ஃபெசோ, கிழக்கில் டோகோ மற்றும் தெற்கில் கினியா விரிகுடாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

கடற்கரையை அண்டியதாக வடக்கே புராதன கானாவுக்கு தொலைவில் அமைந்துள்ள நிகழ் கால கானா, பரந்த புல்வெளிகளையும் அதிகளவான வளமான காடுகளையும் கொண்டது.







## மக்கள்

இங்கு எக்கான், மோல்-டெக்பானி, ஈவ், மற்றும் கா-எடம் ஆகிய பிரதான இனங்கள் உள்ளிட்ட மேலும் பல இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள். சுதேச மத நம்பிக்கை கொண்டவர்களும் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுவோரும் இங்கு வாழ்கின்றனர்.

## வரலாறு

புராதன காலத்தில் மேற்கு ஆபிரிக்க கானா பேரரசாகத் திகழ்ந்த இப்பிரதேசம், கி.பி 1240 இல் இஸ்லாமிய ஆட்சியாளராகிய 'சந்தியாட்டா' என்பவரால் ஆளப்பட்டதோடு பின்னர் அது மிகப்பெரிய மாலி சாம்ராஜ்ஜியமாக விரிவடைந்தது. புவியியல் அமைப்பின்படி, புராதன காலத்தில் கானா நாடானது இன்றைய கானா அமைந்துள்ள இடத்திலிருந்து 500 மைல் வடக்கே அமைந்திருந்தது. இங்கு பல்வேறு இனக்குழுவினர்கள் குடியேறி புராதன நாகரிகத்தைப் பின்பற்றியதோடு, அவர்களில் ஒரு பகுதியினர் புராதன கானா நாட்டு மூதாதையினரின் வழிவந்தவர்கள் ஆவர்.

புராதன சாம்ராஜ்ஜியமாக விளங்கிய கானா 13 ஆம் நூற்றாண்டு வரை பலம் பொருந்தியதாகத் திகழ்ந்தது. 13 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் 'எக்கான்' வாசிகள் இதன் பிரதான நாகரிகக் குழுக்களாக உருவாகியதுடன், 18-19 ஆம் நூற்றாண்டாகும் பொழுது 'அஷாந்தி' இனத்தினரால் உருவாக்கப் பட்ட சாம்ராஜ்ஜியம் முக்கிய இடத்தை வகித்தது.

1470 இல் இப்பிரதேசம் போர்த்துக்கேய வர்த்தகத் தளமாக மாறியது. அதன்பின் முறையே 1553 இல் ஆங்கிலேயரும் 1595 இல் ஒல்லாந்தரும், 1640 இல் சுவீடன் நாட்டினரும் கானா நாட்டினுள் பிரவேசித்தனர். 1820 இல் அவர்கள் இப்பிரதேசத்தினுள் தமது ஆட்சியைப் பரப்பிய பொழுதிலும் 1901 இல் அவ்வாட்சி 'அஷாந்தி' சாம்ராஜ்ஜியத்தின் பலமான எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது. இதனை தொடர்ந்து 'அஷாந்தி' சாம்ராஜ்ஜியம் உறுதியாக மீள்நீர்மாணிக்கப்பட்டது.

அதன்பின் புராதன ஜேர்மனியின் குடியேற்றப் பிரதேசமாகத் திகழ்ந்த பிரித்தானிய டொகோலாந்து பிரதேசம் 1956 இல் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் கானாவாக மீள் ஸ்தாபிக்கப்பட்டது. 1957 மார்ச் மாதம் 6 ஆம் திகதி சுயாதீன ராட்சியமாக உருவெடுத்த கானா, பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் பெறுபேறாக 1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் திகதி குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| தலைநகர் | : அக்ரா |
| பெரிய நகரம் | : அக்ரா |
| அரச மொழி | : ஆங்கில மொழி |
| அரசு | : பல கட்சி நாடாளுமன்றம் கொண்ட குடியரசு |
| ஜனாதிபதி | : ஜோன் இவான்ஸ் எட்டா மில்ஸ் |
| பிரதமர் | : ஜோன் டிரமானி மஹாமா |
| முழு நிலப்பரப்பு | : 238,535 சதுர கிலோமீற்றர். (இதில் 3.5% நன்னீர்த்தேக்கம்) |
| உத்தேச சனத்தொகை (2007) | : 23,000,000 |
| நாணயம் | : கானியன் செடி |
| காலம் | : கிரீன்விச் நேரம் |
| இணையத்தளக் குறியீடு | : .gh |
| சர்வதேச தொலைபேசி இலக்கம் | : +233 |



## அஷாந்தி

மேற்கு ஆபிரிக்காவில் மிகப் பிரபலமான சாம்ராஜ்ஜியங்களில் ஒன்றை உருவாக்கிய இனம் அஷாந்தி இனமாகும். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இச் சாம்ராஜ்ஜியம், பிரிட்டிஷ் படைகளிடம் வீழ்ச்சியுறும் வரை இப்பகுதியின் மேன்மை மிக்க சாம்ராஜ்ஜியமாக விளங்கியது. தங்கம்தான் இதன் அடிப்படைப் பொருளாதார மூலமாகவும் இருந்தது.

## பொருளாதாரம்

மேற்கு ஆபிரிக்காவின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான கானாவின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே விளங்குகின்றது. நாட்டின் உழைப்பாளிகளில் 60% மானோர் விவசாயத்தையே மேற்கொள்கின்றனர். அவர்களின் பிரதான வர்த்தகப் பயிர்களாக கொக்கோ, நெல், கோப்பி, மரவள்ளி, நிலக்கடலை, சோளம் மற்றும் வாழை என்பன விளங்குகின்றன. மீன்பிடிக் கைத்தொழில், மரக் கைத்தொழில் என்பனவும் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றன.

அவ்வாறே, கானாவின் வடக்கு, தெற்கு மற்றும் கரையோரப்பிரதேசங்களில் பெருமளவில் கிடைக்கப் பெறுகின்ற தங்கம், வைரம், பொக்சைட் மற்றும் மெங்கனீஸ் ஆகிய இயற்கை வளங்களும் பெற்றோலிய கனிய எண்ணெயும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கின்றன.


கானாவின் பிரதான வர்த்தக தொடர்புகளைக் கொண்ட நாடுகளாக நெதர்லாந்து, நைஜீரியா, ஐ.அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் திகழ்கின்றன.

விரைவில்
புதியதொரு கோணத்தில்
நாடுகளைப் பற்றி
ஆராயவுள்ளோம்.
எதிர்பாருங்கள்!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மழை நீரை சேமித்து நன்மை பெறுவோம்



**நாம் பல வழிகளில் நீரைப் பெற்றுக்கொண்டாலும் சிலகாலங்களில் அந்த வழிகள் தடைப்பட்டு, நீர் இல்லாமல் போய் விடுவதுண்டு. அப்போது நீர் இன்றி மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் மழை நீரைச் சேமித்து வைப்பதனூடாக அசௌகரியங்களை ஓரளவுக்கேனும் தவிர்த்துக் கொள்ளலாம்.**

## மழை நீர் சேகரிப்பு

குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மழைக்காலத்தில் கிடைக்கும் மழை நீரை வறட்சி நிலவும் காலத்தில் மனிதர்களின் அன்றாட மற்றும் விவசாயத் தேவைகளுக்காக சேமித்து வைத்திருப்பது 'மழை நீர் சேமிப்பு' எனப்படுகின்றது.

## மழை நீரை எவ்வாறு சேமிக்கலாம்?

மழை நீரை சேகரிக்கக் கூடிய இரண்டு வகை நீர்த் தாங்கிகள் உள்ளன.

**✱ செங்கல் அல்லது சீமெந்தினால் கட்டப்பட்டு மூடி வைக்கக் கூடிய நீர்த்தாங்கி:**

இந்த நீர்த்தாங்கி மூலம் சேமிக்கப்படுகின்ற மழை நீரை வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தலாம்.

**✱ திறந்த தாங்கி:**

மழை பெய்கின்றபோது நீர் நேரடியாக தாங்கிக்குள் விழக்கூடியவாறு மேல்ப்பகுதி திறந்த நிலையில் அமைந்துள்ள நீர்த்தாங்கி. இந்த தாங்கியில் சேமிக்கப்படுகின்ற நீரை விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முடியும்.

## மழை நீர் சேமிப்பின் அவசியம்

✱ தூய நீராக, குறைந்த செலவில் நீரைப் பெற முடியுமான ஒரே வழி மழை நீரைச் சேமிப்பதாகும்.

✱ மழைக்காலத்தில் மழை நீரை சேமிக்கும் வகையிலான நீர்த்தாங்கி வீட்டோடு அமைந்திருக்கும்போது நீரை ஓர் இடத்தில் இருந்து கொண்டு வருவதற்கும் சேமிப்பதற்குமான நேர விரயமும் களைப்பும் குறைக்கப்படுகின்றது.

✱ நீரை விநியோகிப்பதற்கான செலவுகள் மிச்சப்படுத்தப்படுகின்றன.

✱ வறட்சி நிலவும் காலத்தில் பயன்படுத்தும் நோக்கில் நீர் சேமிக்கப்படுவதால், மக்களிடையே நீரைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றது.

✱ சேமிக்கப்படும் நீரை குடிப்பதற்கும் வீட்டுத் தேவைகளுக்காகவும் விவசாயத் தேவைகளுக்காகவும் பயன்படுத்த முடிகின்றது. இவ்வாறு சேமிக்கப்படும் மழை நீரை குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தினால் 5-6 மாத காலத்திற்கான நீர்த் தேவையை ஈடு செய்யமுடியும்.





## மழை நீர் சேமிப்புத்தாங்கியை எவ்விடத்தில் அமைக்கலாம்?

✱ நீர்த்தாங்கியை அமைப்பதற்கு வீட்டுக்கு அண்மையில் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

✱ உறுதியான தரையாக இருக்க வேண்டும்.

✱ தெரிவு செய்யப்பட்ட இடத்தில் கற்கள், மரவேர்கள் இல்லாதிருக்க வேண்டும்.

✱ வீட்டுக்கூரை நிலமட்டத்தில் இருந்து 9 அடி உயரத்தில் அல்லது அதற்கு மேலாக அமைந்து இருத்தல்.

✱ கூரையிலிருந்து கீழ்நோக்கி நீர் வடிந்து செல்வதற்கு ஏற்றவாறு பீலி அல்லது குழாய் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

## தாங்கியின் வாய்

கூரையில் இருந்து மழைநீர் தாங்கிக்குள் வரும்போது அந்நீரானது வடிகட்டப்படக்கூடிய ஓர் அமைப்பினூடாக வந்து, தாங்கிக்குள் சேகரிக்கப்படக் கூடியதாக இருக்கவேண்டும். அதன்படி, வடிகட்டல் அமைப்பு தாங்கியின் வாய்ப்பகுதியில் வைக்கப்படல் வேண்டும். கல் மற்றும் மணல் நிரப்பி, அதனூடாக நீர் வடிகட்டப்பட்டு, தாங்கிக்குள் நிரம்பும் வகையில் வடிகட்டல் அமைப்பு இருக்க வேண்டும்.

## தாங்கியை பராமரிக்கும் முறை

✱ மழை நீர் சேமிப்புத் தாங்கி நிர்மாணிக்கப்பட்டு, சுமார் 14 நாட்களுக்குப் பதப்படும் வகையில் வைக்க வேண்டும்.

✱ முதல் 6 நாட்கள் வரை தாங்கியில் நீர் தேங்கி நிற்கக்கூடியவாறு ஈரழிப்புடன் இருக்க வேண்டும்.

✱ 6 நாட்களின் பின்னர் தாங்கிக்குள் 1 அடி அளவுக்கு நீரை நிரப்புங்கள்.

✱ 14 நாட்களும் தாங்கியை மூடி வைத்திருங்கள்.

✱ தாங்கியினுள் பூச்சிகள் நுழைய முடியாதவாறு அதன் வாய்ப்பகுதியை மூடி வைக்க வேண்டும்.

✱ தாங்கியினுள் சூரிய ஒளி படாமல் பாதுகாக்கவும்.


✱ கடும் மழை பெய்யும் போது நீர்த்தாங்கிக்குள் வந்தடைவதற்கு ஏற்றவாறு குழாய் அமைப்பு செய்யப்பட வேண்டும்.

✱ நீரை சிந்தாமல் இலகுவில் எடுப்பதற்காக கீழ்ப் பகுதியில் நீர்க்குழாயொன்றைப் பொருத்துங்கள்.

✱ நீர்த்தாங்கி அமைந்துள்ள பகுதியை எப்போதும் சுத்தமாக வைத்திருங்கள்.

மழைநீர் வீணாக நிலத்தில் வடிந்தோடுவதைத் தடுக்கும்முகமாக ஒரு தாங்கியை அமைத்து, மழை நீரை சேமித்துக் கொண்டால் வறட்சிக் காலத்தில் ஏற்படும் நீர்ப்பற்றாக்குறையின்போது ஏற்படக் கூடிய பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ளலாம். எமது நாட்டில் குறிப்பாக அடிக்கடி வறட்சி நிலவும் பிரதேசங்களில் நீர்ப் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வாக மழை நீரை சேமிக்கும் செயற்றிட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கல் மற்றும் மணல் நிரப்பி அமைக்கப்பட்டுள்ள வடிகட்டல் தொகுதி




அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் வளர்ச்சிக்குத்

**எமது உடலுக்கு போசணைச் சத்துக்கள் அவசியமாகின்றன. இந்தப் போசணைகளை எமக்குத் தரக் கூடிய சத்துக்களாவன; கொழுப்பு, புரதம், மாப்பொருள், விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் என்பனவாகும்.**

இதில் கனியுப்புக்களில் ஒன்றான இரும்புச் சத்து (Iron) மிகவும் முக்கியமானதொரு ஊட்டச்சத்தாகும். இரும்புச்சத்து குறைவடையும்போது மூளை வளர்ச்சி பாதிக்கப்படுவதோடு, உடலில் பல்வேறு பலவீனங்கள் ஏற்படுகின்றன. அதனால், இரும்புச் சத்துக்கள் உள்ள போஷாக்கு நிறைந்த உணவு வகைகளை தேர்ந்தெடுப்பது அவசியமாகின்றது.

## இரும்பு என்றால் என்ன?

இரும்பு என்றவுடன் அதனை ஒரு உலோகப் பொருளாகவே நாம் கருதுகின்றோம்.ஆனால்,இந்த இரும்புச்சத்தானது நாம் நினைப்பதற்கு முற்றிலும் மாற்றமான வழியிலேயே எமது உடலைச் சென்றடைகின்றது. நாம் உண்ணும் உணவுகளில் இச்சத்தானது தங்கி இருக்கின்றது. இது எமது உடலுக்கு மிக அத்தியாவசியமான ஒரு போசணைச் சத்தாகும்.

## உடலுக்கு இரும்புச்சத்து ஏன் தேவைப்படுகின்றது?

நாம் தாயின் கருவறையில் இருப்பது தொடக்கம் பிறந்து-வளர்ந்து-ஆளாகும் வரையில் இரும்புச்சத்து முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. உடல் வளர்ச்சி, எலும்புகள் பலமடைதல், உடலுக்குத் தேவையான சக்தி என்பனவற்றை இரும்புச்சத்து வழங்குகின்றது.

அத்துடன், உடலில் அனைத்துத் தொழிற்பாடுகளுக்கும் தேவைப்படுகின்ற ஒட்சிசன், குருதியூடாக உடலில் எடுத்துச் செல்லப்படுவதற்கும் 'ஹீமோக்ளோபின்'(Hemoglobin) உருவாக்கத்திற்கும் இந்த இரும்புச்சத்து அவசியமாகின்றது. இவைதவிர,

★ இலகுவில் நோய்கள் தொற்றாமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக.

★ உடல் மற்றும் மூளை வளர்ச்சி சீராக நடைபெறுவதற்கு.

★ விரைவில் களைப்படைவதைத் தடுப்பதற்கு.

★ மந்த நிலையிலன்றி, சுறுசுறுப்பாக வேலைகளில் ஈடுபடுவதற்கு.

★ நினைவாற்றலை விருத்தி செய்வதற்கு.

★ உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கச் செய்தல் என்பவற்றோடு, குருதி உடலில் சுரப்பதற்குத் தேவைப்படும் சேர்வைகள் உருவாவதற்கும் இரும்புச்சத்து தேவைப்படுகின்றது.

போதியளவு இரும்புச்சத்து உடலில் இருக்குமானால் இரத்த ஓட்டம் இலகுவாக மேற்கொள்ளப்படும். அதன் ஊடாக உடலின் செயற்பாடும் வளர்ச்சியும் முறையாக நடைபெறும். இன்றேல் இரத்த ஓட்டம் தடைப்படும். இதனால், அதனோடு தொடர்புடைய பல நோய்கள் வெளிப்பட்டு, உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

## எமது உணவு

எமது நாட்டு உணவைப் பொறுத்தவரையில் அதிகளவு தாவர உணவு வகைகளிலிருந்தே எமக்கு இரும்புச்சத்துக் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த உணவு வகைகளில் இருந்து



உடலுக்குள் உறிஞ்சப்படும் இரும்புச் சத்தின் அளவு நாம் உண்ணும் உணவு வகைகளைப் பொறுத்தே அமைந்திருக்கும். காரணம், அந்த உணவு வகையில் வேறு போசணைப் பதார்த்தங்கள் இருக்குமாயின், அங்கே இரும்புச்சத்தை விட ஏனைய சத்துக்களே கூடியளவு அகத்துறிஞ்சப்படும்.

ஆகவே, எமது அன்றாட உணவில் ஏதாவதொரு வகையில் மாமிச உணவுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் போதிய இரும்புச்சத்து எமது உடலுக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.



## அடங்கியுள்ள

★ மாமிச உணவு வகைகள் மூலம்
கிடைப்பதோடு, தசை மற்றும் எலும்
அவசியமாகின்றது.

க

இ

உ+ம் :

நிறமான கீரை வ

இருந்தும் இரும்புச்சத்து

சப்படுகின்றது.

## உங்களுக்குத்

நாம் அன்றாடம் உண்ணும் உண
புச்சத்தின் அளவை மையமாக வை
உறிஞ்சப்படுகின்றது.நாம் உண்ணு
இரும்புச்சத்து அடங்கியிருப்பதில்
புச்சத்து அடங்கியுள்ள உணவுகளை
சிலவேளைகளில் அது உடலுக்குள்
தில்லை.

## இரும்புச்சத்தை உ தரக்கூடிய உ

தக்காளி, எலுமிச்சை என்பனவற்
சேர்த்துக்கொள்வதனூடாக உடலுக்
அதிகளவில் அகத்துறிஞ்சப்படு
தோட்டத்தில் இருந்து கிடைக்
உண்பதாலும் இரும்புச்சத்து
வெற்றிடம் நிரப்பப்படுகின்ற
உ+ம் : கொய்யா, நெல்லி

## இரும்புச்சத்துக்

இரும்புச்சத்துக் குறை
விதமான நோய்கள் ஏற்ப
குக் குறைபாட்டுக்கான பி
இரும்புச்சத்துக் குறைபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை இரும்புச்சத்து

## ...புள்ள உணவுகள்

...ள் மூலம் இரும்புச்சத்து கூடுதலாகக் ...றும் எலும்புகளின் வளர்ச்சிக்கும் இது



உ+ம் : இறைச்சி, மீன், கருவாடு, நெத்தலி போன்ற மாமிச உணவு வகைகளில் இரும்புச்சத்து அதிகம் காணப்படுகின்றது.

★ அதே போன்று தாவர உணவு வகைகளிலும் இச்சத்து அடங்கியுள்ளது.

உ+ம் : தானியங்கள், கடும் பச்சை ...ன கீரை வகைகள் என்பனவற்றில் ...ரும்புச்சத்து உடலுக்கு உறிஞ்...

## ...க்குத் தெரியுமா?

...லும் உணவில் அடங்கியுள்ள இரும் ...மாக வைத்தே உடலுக்குள் அது ... உண்ணும் எல்லா உணவுகளிலும் ...நப்பதில்லை. அத்துடன், இரும் ...ணவுகளை உட்கொண்டாலும் ...டலுக்குள் உறிஞ்சப்படுவ...

## ...தை உப சத்தாக ...ய உணவுகள்

...ன்பனவற்றை எமது உணவில் ...க உடலுக்குள் இரும்புச்சத்து ...றிஞ்சப்படுகின்றது. வீட்டுத் ...து கிடைக்கும் சில பழவகைகளை ...ம்புச்சத்துக் குறைபாட்டு ...படுகின்றது.

...நெல்லி

## ...த்துக் குறைபாடு

...துக் குறைபாட்டால் பல ...கள் ஏற்படுகின்றன. போஷாக் ...டிக்கான பிரதான காரணியாக ... குறைபாடு இருக்கின்றது.




அவ்வாறே எமது உடலில் உள்ள இழையங்களுக்கு ஒட்சிசனைக் கடத்து வதற்கு 'ஹீமோக்ளோபின்' தேவைப்படுவதோடு, இரும்புச் சத்துக் குறை வதனால் 'ஹீமோக்ளோபின்' அளவும் குறைவடை கின்றது. இதுவே



குருதிச்சோகை நோய் (எனீமியா) எனப்படு கின்றது. அவ்வாறே எமது குருதிக்கு சிவப்பு நிறத்தைக் கொடுப்பதும் 'ஹீமோக்ளோபின்' ஆகும்.

## குறைபாட்டின் அறிகுறிகள்

★ வளர்ச்சி குன்றுதல்.
★ உடல் வெளிறிய தன்மை. (குறிப்பாக உள்ளங்கை, கண்)
★ உடலில் வேதனை.
★ களைப்பு.
★ அவதானிப்பு மற்றும் ஞாபக சக்தி குறைதல்.
★ விரைவில் நோய்களுக்கு ஆளாதல்.




## இரும்புச்சத்துக் குறைபாட்டில் இருந்து பாதுகாப்பு

நாம் எப்போதும் இரும்புச்சத்து அதிகம் உள்ள உணவு வகைகளை அடையாளம் கண்டு, அவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதேநேரம் இரும்புச் சத்துள்ள மருந்துகளை நாடுவதாயின் வைத்தியரின் ஆலோசனையின் பேரிலேயே அவற்றை எடுக்க வேண்டும்.

## இரும்புச்சத்துக் குறைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்


✱ அன்றாட உணவில் போதியளவு இரும்புச்சத்து இல்லாமை.

✱ சில வகையான உணவில் இரும்புச்சத்து இருந்தாலும் அது உடலுக்குள் உறிஞ்சப்படாமை.

✱ இரத்தப்போக்கு (அர்ஷஸ், மூலவியாதி மற்றும் திடீர் விபத்து நோய்கள் ஏற்பட்டால் தொடர்ச்சியாக நீண்ட நாட்களுக்கு இரத்தப்போக்கு ஏற்படும்)

✱ தொற்று நோய்கள் விரைவில் தொற்றிக் கொள்ளும் அபாயம்.

உ+ம் : கொழுக்கிப் புழு, மலேரியா போன்ற நோய்கள் விரைவில் ஏற்படலாம்.



## உடலுக்கு இரும்புச்சத்து உறிஞ்சப்படும் அளவை அதிகரித்துக் கொள்ள

✱ விற்றமின் C உள்ள புதிய மரக்கறி, பழவகைகளை அதிகம் உண்ணல்.

✱ இயன்றளவு மாமிச உணவுகளை பிரதான உணவு வேளைகளின்போது சேர்த்துக்கொள்ளல்.



✱ தக்காளி, புளி, எலுமிச்சை போன்ற அமிலத்தன்மை உள்ளவற்றை உணவுடன் இணைத்துக்கொள்ளல்.

✱ சில வகை உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதற்கு முன்னர் அவற்றை புளிக்கச் செய்யவேண்டும். அவ்வாறான உணவுகளையும் இடைக்கிடை சாப்பிடுதல்.

உ+ம் : அப்பம்,தோசை போன்றவை.

✱ கடலை, பயறு போன்ற தானிய வகைகளை நீரில் ஊறவைத்து, முளை வெளிப்படும்போது உணவாகக் கொள்ளுதல்.

✱ இரும்புச்சத்தைக் கரைக்கும் பானங்களைத் தவிர்த்தல். குறிப்பாக கோப்பி, தேநீர் என்பனவற்றில் உள்ள ரசாயன பதார்த்தமொன்று இரும்புச் சத்து உடலுக்குள் உறிஞ்சப்படுவதைத் தடுக்கின்றது. அதனால், உணவு உட்கொண்டவுடன் அல்லது உணவு உட்கொள்ளும்போது இவற்றைப் பருகுவதைத் தவிர்க்க வேண்டும்.

## வீட்டுத் தோட்டத்தில் இருந்து

எமது உடலுக்குத் தேவைப்படும் இரும்புச்சத்தை எமது வீட்டுத் தோட்டத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். தானியங்கள், கீரைவகை, சிலவகையான மரக்கறி வகை என்பன இரும்புச்சத்தின் உறைவிடமாகும்.வல்லாரை, பசளி, சிவப்புக் கிழங்கு, கொடிக்கிழங்கு வகையில் சிவப்பு நிறக் கிழங்கு இனம், முள்முருங்கை, கங்குன் மற்றும் பழவகைகளில் நெல்லி, கொய்யா ஆகியனவற்றையும் குறிப்பிடலாம். இவை எமது வீட்டுத்தோட்டத்தில் எம்மால் பயிரிட்டுப் பயன்பெறக்கூடியவையாகும்.

அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமை இளவரசன்

செல்வச்சிறப்புமிக்க 'கர்ஜாபுரம்' நாட்டில் நீதியான ஆட்சியே ஓங்கி விளங்கியது. அந்நாட்டு அரசன் நேர்மையானவனாகவும் அநியாயத்தை எதிர்ப்பவனாகவும் காருண்யமானவனாகவும் விளங்கினான். ஆயினும் அவனுக்குக் குழந்தைப்பாக்கியம் இருக்கவில்லை. இதனால், அரசனும் அரசியும் மிகவும் கவலைப்பட்டனர். அரசவையும் வெறிச்சோடிக் கிடந்தது.

தனக்கோர் குழந்தை பெற முடியாதோ எனத் துக்கமடைந்த அரசி வேண்டாத தெய்வம் இல்லை. நோற்காத விரதம் இல்லை. இப்படி 20 ஆண்டுகள் கழிந்தன. காலப்போக்கில் அரசிக்கு மிகுந்த அழகுடைய குழந்தையொன்று பிறந்தது.

அரசனும், அரசியும் மிகவும் சந்தோஷமடைந்தனர். ஆனால், இச்சந்தோஷம் நெடுநாள் நீடிக்கவில்லை. ஏனெனில், இளமைப் பருவத்தை அடைந்தும் இளவரசர் சுறுசுறுப்பில்லாதவராகக் காணப்பட்டார். அதாவது, வீர காரியங்கள், விளையாட்டுக்கள், வேட்டையாடுதல் போன்ற காரியங்களை அவர் செய்வதில்லை. இதனால், அரசர் தனது மகன் தற்பாதுகாப்பினை ஏற்படுத்திக்கொள்ளவோ மற்றும் போர்களில் ஈடுபடுவதற்கோ முனையமாட்டானோ? என்று அச்சமுற்றார். ஆனாலும், இளவரசனை அக்காரியங்களில் ஈடுபடச் செய்ய ஓர் உபாயம் செய்து நாட்டு மக்களுக்கோர் செய்தி வெளியிட்டார்.

"எனது மகனை மடக்கி அவனோடு சண்டையிடவோ அல்லது ஒப்பந்தமிட்டு விளையாடவோ எவருக்கேனும் துணிவிருந்தால் அரசவைக்கு வரலாம், அவருக்கு ஏராளமான பரிசுகள் வழங்கப்படும்'' என்று நாடெங்கும் பறைசாற்றப்பட்டது.

இதைக் கேள்வியுற்றுப் பலரும் போட்டியிடுவதற்கு அரசவை வந்தனர். எனினும் இளவரசரோ இவை யொன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை. இதனால், அரசர் மிகவும் மனவேதனைக்கு உட்பட்டார். ஒருநாள் வைத்தியரொருவர் இளவரசரைக் குணப்படுத்தும் நோக்கில் அரசரைக் காணவந்தார். அரசன் அவ்வைத்தியரை உள்ளே அனுமதித்து இளவரசரை பற்றிக் கூறினார். இதைக்கேட்ட வைத்தியர்,"இதுவொன்றும் நோயல்ல; ஒவ்வோர் மனிதனுக்கும் ஒவ்வோர் இயல்புண்டு. இளவரசருக்கும் அப்படித்தான். காலப்போக்கில் சரியாகிவிடும்'' என்றார் வைத்தியர். பின்னர் "இளவரசரை மனவேதனைக்கு உட்படுத்தும் ஏதாவது செயல்கள் நடந்தால் சில வேளை இளவரசர் கொடூரமாகச் செயற்படலாம்'' என்றார். இதைக்கேட்டுத் திகைத்துப் போன அரசர் இளவரசருக்குத் துணையாக காவலாளி ஒருவனை நியமித்திருந்தார். காலங்கள் ஒடின.

ஒருநாள் மாலைவேளையில் அமைதியான சூழலில் அரண்மனைப் பூங்காவில் இளவரசர் உலா வந்து கொண்டிருந்தார். அவரோடு காவலாளியும் இருந்தான். அவ்வேளையில், ஒரு மரத்தில் பருந்து ஒன்றும் குருவியொன்றும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. இவ்வேளையில் பருந்தின் தாக்குதலை தாங்கமுடியாத குருவி அபயக்குரல் எழுப்பிக் கொண்டிருந்தது. இதனைக் கவனித்த இளவரசர் காவலாளியின் வில்லையும் அம்பையும் எடுத்து பருந்தைக் குறி பார்த்து அம்பை எய்தார். அம்புபட்ட மறுகணமே பருந்து 'தொப்' என்று கீழே விழுந்தது. பின்பு மரத்திலேறிக் காயப்பட்ட குருவியைக் கையிலெடுத்து அதற்கு இலைகளினால் வைத்தியமும் செய்தார். இதனை நோட்டமிட்ட காவலாளி இளவரசர் பருந்தைக் கொன்றுவிட்டார். நன்றாக அம்பு விடுகிறார்'' என்று கத்தியவண்ணம் அரசவையை நோக்கி ஓடினான்.

அரசர் வியப்படைந்து எங்கே என் மகன்? அவனிடம் என்னை அழைத்துச் செல்'' என்றார். மகனிடம் சென்ற அரசர் "மகனே! இவன் கூறுவது உண்மையா?'' என்றார். இளவரசர் மௌனமாக இருந்தார். பின்பு அக்காவலாளி, "அரசே! நான் கூறுவது முற்றிலும் உண்மை. அதோ பாருங்கள் பருந்து கீழே விழுந்து அம்புடன் இறந்து கிடக்கிறது'' என்று காட்டினான். அப்போது அரசர் தனது மகனை நோக்கி...

"மகனே! ஏன் நீ இந்தப் பருந்தைக் கொன்றாய்?'' என்று கேட்க இளவரசர் அநியாயத்தை எதிர்க்க ஆசைப்படுகிறேன். நல்லவேளை கடவுள் என்னை இப்படியொரு சம்பவத்தின் மூலம் என் திறமையை வெளிக்காட்ட வாய்ப்பளித்தார். உங்கள் செய்தியால் மக்கள் எத்தனை பேர் என்னிடம் சண்டையிட வந்தனர். நான் சற்று அசைந்து கொடுத்திருந்தால் வீண் கொலைப் பழி முழு அரச வம்சத்திற்கே அல்லவா?'' என்று இளவரசர் கூறினார்.


தனது மகனின் நேர்மையையும் திறமையையும் எண்ணிப் பூரிப்படைந்த அரசர் மறுபக்கம் தனது முட்டாள்தனத்தை எண்ணி தன்னையே நொந்து கொண்டார்.

எம்.ஆர்.எஃப்.ருக்ஷானா,
பண்டாரவளை.



# நீர் வளத்தைப் பேணுவோம்

மனிதர்களுக்கு அத்தியாவசியமானவற்றுள் நீர் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எமது தாய் நாட்டை "இந்து சமுத்திரத்தின் முத்து'' என்று கூறுவர். ஏன் தெரியுமா? நீர், நிலம், தாவரம் என இயற்கை வளங்கள் நிறைந்த அழகிய தீவு எமது நாடு. இந்த நாட்டின் சிறப்புக்கு முக்கிய காரணி இதன் நீர் வளமேயாகும்.



முற்காலத்தில் எமது நாட்டை ஆண்ட மன்னர்களுள் ஒருவரான மகா பராக்கிரமபாகு என்ற மன்னன் "வானில் இருந்து விழும் ஒரு துளி நீரைக் கூட வீண் விரயம் செய்யக் கூடாது'' என்று கூறியுள்ளார். இறைவனால் மனிதனுக்கு அளிக்கப்பட்டவற்றுள் நீர்வளம் மிகச் சிறந்தது ஆகும். இத்தகைய அரும் பெரும் செல்வமான நீர்வளத்தை நாம் பாதுகாத்தல் வேண்டும். நாம் கழிவுப் பொருட்களை ஆறு, குளம், நீர் நிலைகளில் போடுவதைத் தவிர்த்தல் வேண்டும். இறைவன் எமக்கு அளித்த இத்தகைய செல்வத்தை உயிர் போன்று நினைத்துப் பேணுவோம். நாட்டில் உள்ள ஆறு, குளம், ஏரி, கடல் போன்றவற்றையும் பேணல் அவசியம். அத்துடன், திறந்து கிடக்கும் குழாய் நீரையும் மூடிவிடல் வேண்டும். பாதையோரங்களில் உடைந்து கிடக்கும் தண்ணீர் குழாய்களை சரிபார்த்தது திருத்துதல் வேண்டும்.

எஃப்.ஷஹானா,
க/புனித அந்தோனியார் மகளிர் கல்., கண்டி.




## விடுகதைகள்

1. வரும்போது வெண் சிவப்பு. வளர வளர தகதகப்பு. போகும் போது கருஞ் சிவப்பு. அது என்ன?
2. தீக்குளித்தாலும் திடமாக இருப்பான். அவன் யார்?
3. வயலில் உழுபவன். ஆனால், ஊதியம் வாங்குவதில்லை. அவன் யார்?
4. ஆட்டலாம் அசைக்கலாம். ஆனால், பிடுங்க முடியாது. அது என்ன?
5. கையில்லாத காலில்லாத கட்டைக் குண்டன், கைகொடுத்தால் எழுந்திருப்பான். காரியக்காரன். அவன் யார்?
6. ஆயிரம் குதிரைக்கு ஒரே வால். அது என்ன?

### விடைகள்

| | |
|---|---|
| 1. சூரியன் | 4. கைவிரல் |
| 2. செங்கல் | 5. குடம் |
| 3. மண்புழு | 6. வாழைப்பூ |

தொகுப்பு: செ.நிலாணி,
ஸ்ரீ சுப்ரமணிய வித்தியாசாலை,
புதுக்குடியிருப்பு.

## வெற்றி நிச்சயம்




பள்ளி செல்லும் சிறுவனே
நீ கருத்தாய் கல்வி கற்றிடு
ஆசான் சொல்லை மதித்திடு
அனைவரின் அன்பையும் பெற்றிடு!

மூத்தோரைக் கனம் பண்ணிடு
இளையோரை அன்பாய் நடத்திடு
ஒற்றுமையே பலம் என வாழ்ந்திடு
ஒற்றுமையாய் கூடி விளையாடிடு!

வீதி விதிகளைப் பேணிடு
முதியோருக்கு உதவி செய்திடு
பெற்றோர் சொற்படி நடந்திடு
நற்பிரஜையாக வளர்ந்திடு!

ஊக்கமுடன் கல்வி கற்றிடு
உலகில் உயர்நிலை அடைந்திடுவாய்
கல்வியை கவனத்துடன் கற்றிட்டால்
நீ வெற்றி காண்பது நிச்சயமே!

எப்.முஸ்பிரா முனாப்,
நீர்/அல்-பலாஹ் மு.வித்.,
போருதொட்ட.

## பொன் மொழிகள்

- அறிவை விரும்பாதவனை நண்பனாக்காதே. அது உன்னைத் தீய வழியில் இட்டுச் செல்லும்.
- தன்னைப் பெரியவன் என கருதுபவனே மனிதரில் கேவலமானவன்.
- அறிவிலி செல்வத்தைத் தேடுவதிலேயே மூழ்கியிருப்பான். அறிஞன் ஞானம், அறிவைத் தேடுவதிலேயே தீவிரமாக இருப்பான்.
- சிந்தனையுடன் கலக்காத கல்வி பயனற்றது. கல்வியுடன் சேராத சிந்தனை அபாயகரமானது.
- அன்னப்பறவையானது பாலில் கலந்துள்ள நீரை ஒதுக்கி பாலைப் பருகுவது போல மாணவர்களும் தீயதை நீக்கி நல்லதைக் கற்றுக்கொள்ளவேண்டும்.
- சொந்த முயற்சியுள்ளவன் ஒருநாளும் கீழே போகமாட்டான். பிறர் முயற்சியில் வாழ்பவன் ஒருநாளும் உயர்வடைய மாட்டான்.

தொகுப்பு: பாத்திமா நுஸ்ரத் நவாஸ்,
முஸ்லிம் பெண்கள் தேசிய பாட.,தர்கா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 2479
ஜே.எல்.டெனிஸன், தரம் - 9, சென்.சேவியார்ஸ் ஆ.கல்., மன்னார்.


அங்.இல : 2480
எஃப்.ஹஸ்னா, தரம் - 11, ஸாஹிரா கல்., மாவனல்லை.


அங்.இல : 2481
தி.கௌசிகன், தரம் - 8, இந்துக் கல்., கொழும்பு-04.


அங்.இல : 2482
பி.திருச்செல்வம், உயர்தரம்(கலை), கந்தகட்டிய த.ம.வித்., கண்டி.


அங்.இல : 2483
டி.பிரதீபன், தரம் - 10, நு/த.ம.வித்., நானுஓயா.


அங்.இல : 2484
எம்.நஷீத், தரம் - 11, கடையாமோட்டை மு.ம.வித்., புத்தளம்.


அங்.இல : 2485
என்.கிரிஜா, உயர்தரம், கிரேக் த.ம.வித்., பண்டாரவளை.


அங்.இல : 2486
எஃப்.சிப்னா, தரம் - 11, அல்-அக்ஸா தே.பாட., கற்பிட்டி.


அங்.இல : 2487
து.துவாரகன், தரம் - 9, சின்னடம்பன் பாரதி வித்., வவுனியா.


அங்.இல : 2488
ஏ.சய்புதீன், தரம்-10, சாஹிரா. தே.பாட., அநுராதபுரம்.


அங்.இல : 2489
எஸ்.பவித்திரா, தரம்-7, த.ம.வித்., தெஹிவளை.


அங்.இல : 2490
ஐ.எம். றஸ்மி, உயர்தரம், அல்-ஹிலால்.ஆ.ம.வித்., முதூர்-01.


அங்.இல : 2491
சகீல் அஹமட், தரம்-8, மதீனா தே.பாட., மடவளை பஸார்.


அங்.இல : 2492
எம்.சுலக்ஷினி, தரம்-6, சண்முகானந்தா. ம.வித்., கணேசபுரம்.


அங்.இல : 2493
லுக்மானுல் ஹக், தரம்-3, அல்-அஸ்ஹர் ம.கல்., தெஹியங்க.


அங்.இல : 2494
ஆர்.சலக்கியராஜ், உயர்தரம், பட்டிருப்பு ம.ம.வித்., மட்டக்களப்பு.


அங்.இல : 2495
யூ.சபியா, தரம்-8, பதியுதீன் மஹ்மூத் பெ.கல்., கண்டி.


அங்.இல : 2496
அ.தியோஜன், தரம்-9, புனித சவேரியார் ஆ.தே.பாட.,மன்னார்.


அங்.இல : 2497
இ.ஜெயச்சந்திரன், கலைப் பிரிவு, யாழ் . பல்கலைக்கழகம்.


அங்.இல : 2498
எம்.எஸ்.எம்.சனூன், தெ.கி பல்கலைக்கழகம்,





கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு


எம்.என்.எஃப்.யுஸ்ரா, தரம் - 9, ஸாஹிரா தேசிய பாட., மாவனல்லை.


அப்கா அக்ரம், தரம் - 3, ஸைனப் முஸ்லிம் ம.க.பா., புத்தளம்.


ஜ.லக்ஷிகா, தரம் - 2^, ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அறநெறிப் பாட., கொழும்பு-05.


அஸ்வினி தனுசிக்கா, தரம் - 2, இராமநாதன் இந்து ம.கல்., கொழும்பு.


மத்/கொத்/பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில் தரம்-6 இல் கல்வி கற்கும் மாணவ, மாணவிகள் அண்மையில் மலையகத்துக்கு கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர்களையும் பொறுப்பாசிரியை உட்பட பெற்றோர்கள் சிலரையும் படத்தில் காண்கிறீர்கள்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

கல்முனை, அல்-மிஸ்பாஹ் வித்தியாலயத்தில் தரம்-5 இல் கல்வி கற்கும் மாணவர்களினால் வெளியிடப்படும் 'BREEZE' என்ற ஆங்கிலச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகை தந்திருந்த அதிதிகளை மாணவர்கள் வரவேற்பதையும் சஞ்சிகைப் பொறுப்பாசிரியர் உட்பட சஞ்சிகைக்குழு மாணவர்களையும் படங்களில் காணலாம்.

*(தகவல்: நிப்றாஸ் மன்சூர் 'விஜய்' இளம் செய்தியாளர்)*





## நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம்...

எதிர்வரும் ஏப்ரல் மாத இதழிலிருந்து 'விஜய்' கைவண்ணங்கள் பகுதியில் புதியதொரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றோம். அதன்படி, நாம் கொடுக்கும் தலைப்புகளின் கீழ் உங்கள் கைவண்ணங்களை அனுப்பி வைக்கவேண்டும். கைவண்ணத்தின் பின்பக்கத்தில் உங்கள் பெயர், கற்கும் தரம், பாடசாலையின் பெயர், பாடசாலை அமைந்துள்ள இடம் என்பனவற்றை எழுதி அனுப்புங்கள். மேற்கூறிய விடயங்களை எழுதி அனுப்புகின்ற நேர்த்தியான, அழகான கைவண்ணங்களைப் பிரசுரித்து, உங்களை மகிழ்ச்சிப்படுத்த 'விஜய்' காத்திருக்கின்றது.

### தலைப்பு

- ★ தரம் 1-5 - எனது பூந்தோட்டம் அல்லது எனது செல்லப்பிராணி
- ★ தரம் 6-8 - துணி அலங்காரம் அல்லது புதிய பழரசம் ஒன்றுக்கான விளம்பரம்
- ★ தரம் 9-11 - மீன்பிடிப்போர் அல்லது வயலில் வேலை செய்வோர்

*கைவண்ணங்களை எதிர்வரும் 18.03.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் மகேஷுக்கும் மல்லிகாவுக்கும் இடையில் நடைபெறும் இன்னும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

**මල්ලිකා:** **මම දත් ගලවගෙන ගෙදර එන්න දුම්රියක් තියෙනවාද?**
மம தத் களவகென கெதற என்ன தும்ரியக் தியெனவாத?
மல்லிகா: நான் பல் பிடுங்கிய பின் வீட்டுக்கு வர புகையிரதம் இருக்கின்றதா?

**මහේෂ්:** **ඔව්, උදේ දහයට දුම්රියක් තියෙනවා.**
ஒவ், உதே தஹயட தும்ரியக் தியெனவா.
மகேஷ்: ஆம், காலை பத்து மணிக்கு புகையிரதம் இருக்கின்றது.

**මල්ලිකා:** **එය අල්ලන්න බැරිවෙයි.**
எய அள்ளன்ன பெறிவெய்.
மல்லிகா: அதைப் பிடிக்க முடியாமல் போகும்.

**දොළහ වෙනකම් ඉස්පිරිතාලෙ ඉන්නවෙයි.**
தொளஹ வெனகம் இஸ்பிரிதாலே இன்னவெய்.
பன்னிரெண்டு மணிவரை வைத்தியசாலையில் இருக்கவேண்டி வரும்.

**මහේෂ්:** **එහෙනම් එකයි කාලට දුම්රියක් තියෙනවා.**
எஹெனம் எகய் காலட தும்ரியக் தியெனவா.
மகேஷ்: அப்படியானால் ஒன்னேகாலுக்கு ஒரு புகையிரதம் இருக்கின்றது.

**මල්ලිකා:** **ඒක මෙහෙට කීයට එයිද?**
ஏக மெஹெட கீயட எய்த?
மல்லிகா: அது எத்தனை மணிக்கு இங்கு வரும்?

**මහේෂ්:** **ඒ දුම්රිය සවස තුනට විතර මෙහෙට එයි.**
ஏ தும்ரிய சவச துனட விதற மெஹெட எய்.
மகேஷ்: அந்தப் புகையிரதம் பிற்பகல் மூன்று மணியளவில் இங்கு வரும்.

**මල්ලිකා:** **ආ... එහෙනම් ඒකේ එන්න පුළුවන්.**
ஆ.. எஹெனம் ஏகே என்ன புலுவன்.
மல்லிகா: ஆ... அப்படியானால் அதில் வரலாம்.

**ඔයාට ගොඩක් ස්තූතියි මහේෂ්.**
ஒயாட கொடக் ஸ்தூதிய் மகேஷ்.
உங்களுக்கு மிகவும் நன்றி மகேஷ்.

**මහේෂ්:** **හොඳයි, එහෙනම් මම ගිහිල්ලා එන්නම්. අයියට පණිවිඩේ කියන්න.**
ஹொந்தய், எஹெனம் மம கிஹிள்ளா என்னம்.
அய்யட பணிவிடே கியன்ன.
மல்லிகா: நல்லது, அப்போ நான் போய் வருகிறேன்.
அண்ணாவுக்கு தகவல் சொல்லுங்கள்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.**

உதா: வீட்டுக்கு வர புகையிரதம் இருக்கின்றதா?
ගෙදර එන්න දුම්රියක් තියෙනවාද?



i. வீட்டுக்கு வர பஸ் இருக்கின்றதா?

.............................................................................

ii. பன்னிரெண்டு மணி வரை வைத்தியசாலையில் இருக்கவேண்டும்.

.............................................................................




'Is' எனும் துணை வினைச்சொல்லை (Auxiliary Verb) தனியொரு வினைச்சொல்லாகக் கையாண்டு அமைக்கப்பட்ட 'உடன்பாடு' வாக்கியங்களை 'வினா' வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறை பற்றிய மேலும் சில உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) He is a driver.
அவன் ஒரு சாரதி. (உடன்பாடு)

(ஆ) Is he a driver?
அவன் ஒரு சாரதியா? (வினா)

**குறிப்பு:** மேற்படி 'வினா' வாக்கியத்தில் 'is' எனும் துணை வினைச்சொல்லுக்கு தமிழில் தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை. இங்கே, தமிழ் இலக்கண மரபின்படி, இவ்வினைச் சொல்லானது, 'தோன்றாவினை' என்றே கொள்ளப்படுகின்றது.

---

(அ) She is a nurse.
அவள் ஒரு தாதி. (உடன்பாடு)

(ஆ) Is she a nurse?
அவள் ஒரு தாதியா? (வினா)

(அ) It is a bird.
அது ஒரு பறவை. (உடன்பாடு)

(ஆ) Is it a bird?
அது ஒரு பறவையா? (வினா)

✸ மேலும் சில உதாரணங்களை இங்கே பயில்வோம்.

(அ) Nimal is a carpenter.
நிமால் ஒரு தச்சன். (உடன்பாடு)

(ஆ) Is Nimal a carpenter?
நிமால் ஒரு தச்சனா? (வினா)

---

(அ) Mary is a teacher.
மேரி ஓர் ஆசிரியை. (உடன்பாடு)

(ஆ) Is Mary a teacher?
மேரி ஓர் ஆசிரியையா? (வினா)

---

(அ) Crow is a bird.
காகம் ஒரு பறவை. (உடன்பாடு)

(ஆ) Is crow a bird?
காகம் ஒரு பறவையா? (வினா)

---

(அ) Your brother is a clerk.
உனது சகோதரன் ஒரு லிகிதர். (உடன்பாடு)

(ஆ) Is your brother a clerk?
உனது சகோதரன் ஒரு லிகிதரா? (வினா)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.


# இந்தியாவுக்கு 'ஒஸ்கார்' விருதுகள்



இந்தியாவில் தயாரான 'ஸ்லம்டோக் மில்லியனர்' என்ற திரைப் படம் கடந்த 23ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற 81 ஆவது ஒஸ்கார் விருது விழாவில் 8 விருதுகளை வென்றுள்ளது.


முற்றிலும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'ஸ்லம்டோக் மில்லியனர்' என்ற திரைப்படம் பத்துப் பிரிவுகளின் கீழ் 'ஒஸ்கார்' விருதுகளுக்காகப் பரிந்துரைக்கப்பட்டது.

இவ்விழாவில் இப்படத்தின் இசையமைப்பாளரான இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இரண்டு ஒஸ்கார் விருதுகளை வென்று, இரண்டு ஒஸ்கார்களை வென்ற முதல் இந்தியர் என்ற சிறப்பைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன், ஸ்லம்டோக் படத்தில் பணியாற்றிய கேரள மாநிலம் கொல்லத்தை சேர்ந்த ரெசூல் பூக்குட்டி என்பவருக்கும் சிறந்த ஒலிக்கலவைக்கான ஒஸ்கார் விருது கிடைத்துள்ளது.

மேலும், இப்படத்தில் இடம்பெற்ற 'ஜெய் ஹோ' பாடலை எழுதிய பிரபல ஹிந்தி பாடலாசிரியர் குல்சாருக்கும் ஒஸ்கார் விருது கிடைத்துள்ளது.

## நவாஸ் ஷெரீஃப் பாகிஸ்தான் தேர்தலில் போட்டியிடத் தடை



பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் தேர்தலில் போட்டியிடுவதற்கு அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. அவ்வாறே, பஞ்சாப் மாநில முதல்வராக தற்போது பதவியில் இருக்கும் அவரது தம்பி ஷபாஸ் ஷெரீஃப் தேர்தலில் தேர்ந்து எடுக்கப்பட்டமை செல்லுபடியற்றது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நவாஸ் ஷெரீஃப் மற்றும் ஷபாஸ் ஷெரீஃப் ஆகியோர் குற்றவியல் வழக்குகளில் குற்றவாளிகளாக தண்டிக்கப்பட்டதால், அவர்கள் தேர்தல்களில் போட்டியிட லாகூர் உயர் நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணையினை அடுத்தே உச்ச நீதிமன்றத்தால் மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டது.

மேற்படி வழக்கு விசாரணையின்போது ஷெரீஃப் சகோதரர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக மறுத்து விட்டார்கள். குறித்த நீதிபதிகள் முன்னாள் ஜனாதிபதி முஷர்ரஃப்பால் நியமிக்கப்பட்டவர்கள் என்றும் அவர்களை நீதிபதிகளாக அங்கீகரிக்க மாட்டோம் என்றும் தன்னையும் தனது சகோதரரையும் தேர்தலில் போட்டியிட தகுதி அற்றவர்களாக அறிவிக்கவே தற்போதைய ஜனாதிபதி சர்தாரி சதி செய்து வருகிறார் என்றும் நவாஸ் ஷெரீஃப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## ஜப்பானில் 'செல்போன்' மோகம்

ஜப்பானில் இளவயதினரிடையே 'செல்போன்' மோகம் பரவலாக ஏற்பட்டிருப்பதாக அந்நாட்டின் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் சாப்பிடும் போதும் பாடசாலைக்குச் செல்லும்போதும் குளிக்கும்போதும் கூட 'செல்போன்' மூலம் தகவல் பரிமாறிக் கொள்வதாக அந்த ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.



நண்பர்களுக்கு மின்அஞ்சல் அனுப்புதல், புத்தகங்களை வாசித்தல், இசையை ரசித்தல் மற்றும் இணைய அரட்டைகளில் ஈடுபடல் போன்ற காரியங்களுக்காகவே இவர்கள் செல்போன்களை உபயோகிப்பதாக தெரியவந்துள்ளது.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் மத்தியில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. சில மாணவர்கள் பெருமளவில் 'செல்போன்' பாவனையில் ஈடுபடுகிறார்கள் என்றும் இதனால், அவர்கள் பாரியளவு பாதிப்புகளை எதிர்கொள்வதாகவும் ஜப்பானிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## 'எவரெஸ்ட்' சிகரத்தில் 24 மணிநேரம் தங்குவதற்கு உத்தேசம்



நேபாளத்தைச் சேர்ந்த பெம்பா டோர்ஜே ஷேர்பா என்பவர் தனது இரு சகோதரர்களுடன் சேர்ந்து 'எவரெஸ்ட்' சிகரத்தின் அபாயகரமான வலயத்தில் 24 மணி நேரம் தங்கியிருந்து உலக சாதனை புரியவுள்ளார்.

இமயமலை ஏறும் காலம் ஆரம்பிக்கவுள்ள தருணத்திலேயே 30 வயதுடைய பெம்பா டோர்ஜே ஷேர்பா தனது இளைய சகோதரர்களுடன் தனது சாதனைப் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஒருநாள் பூராகவும் சிகரத்தில் தங்கி இருக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

சிகரத்தின் உச்சிக்கு சென்று, 24 மணிநேரமும் உலகில் சமாதானம் ஏற்படவேண்டி தாம் பிரார்த்தனையில் ஈடுபடப்போவதாக தெரிவித்துள்ள இவர், ஏற்கனவே மிகக் குறுகிய காலமான 8மணி, 10 நிமிட நேரத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனையையும் நிலைநாட்டியுள்ளார்.

இவர் தமது சாதனைக்கான பயணத்தின்போது தங்கமுலாம் பூசப்பட்ட புத்தர் சிலையுடன், இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களின் சின்னங்களையும் எடுத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

**அற்லஸ் கேள்வி - 193**

**கேள்வி:** இமயமலை உச்சியில் ஒரு நாள் பூராவும் தங்கியிருந்து சாதனை புரிய உள்ளவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

சரியான விடை....................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 193,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 191 இன் சரியான விடை: ஜோ பைடன்**

**பரிசு பெறுவோர்**

எல். ரிஸ்வியா,
தாஜ்மஹால் வீதி, பிறைந்துறைச் சேனை,
வாழைச்சேனை.

சுலக்ஷி பிரியங்கா,
475, பிரதான வீதி, மாத்தளை.

ஹிமாஸ்,
308/7 A, தும்மலதெனிய, வரக்காப்பொளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலுமிச்சை மகத்துவம்

குறைந்த விலையில், எல்லாச் சத்துக் களும் நிரம்பிய எலுமிச்சம்பழமா னது, மனிதர்களுக்கு ஏற்படும் பல வித நோய்களையும் குணமாக்கும் சர்வரோக நிவாரணியாகத் திகழ்கின்றது. Citrus limon எனும் தாவரவியல் பெயரால் இது அழைக்கப்படுகின்றது. அத்துடன், இப்பழத்தின் அனைத்துப் பகுதிகளும் எமக்குப் பயன் மிக்கவையாக உள்ளன.

### பிரதான சத்துக்களின் மதிப்பீடு

| | |
|---|---|
| நீர் ( ஈரப்பதம்) | - 50.0 கிராம் |
| கொழுப்பு | - 1.0 கிராம் |
| புரதம் | - 1.4 கிராம் |
| தாதுப்பொருள் | - 0.8 கிராம் |
| மாப்பொருள் | - 11.0 கிராம் |
| நார் | - 1.2 கிராம் |
| சுண்ணாம்புச் சத்து | - 0.80 மி.கிராம் |
| விற்றமின் 'C' | - 63.0 மி.கிராம் |

இவை தவிர, பொஸ்பரஸ் 0.20 மி.கி, இரும்புச்சத்து 0.4 மி.கி, கரோட்டின் 12.0 மி.கி, தயமின் 0.2 மி.கி, நியோசின் 0.1 மி.கி, விற்றமின் 'A' 1.8 மி.கி, விற்றமின் '$B_1$' 1.5 மி.கி ஆகிய சத்துக்களும் காணப்படுகின்றன.



### அறிமுகம்

இது இந்தியா, வடக்கு மியன்மார் (பர்மா), சீனா ஆகிய பகுதிகளிலேயே தோன்றியிருக்கலாம் என நம்பப்படுகின்றது. தெற்காசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் இது ஒரு தொற்றுநீக்கியாகப் பயன்பட்டு வந்தது. அத்துடன் பலவகை நச்சுப் பொருட்களுக்கான நஞ்சு முறிப்பு மருந்தாகவும் பயன்பட்டது.

முதன்முதலாக 12 ஆம் நூற்றாண்டில் இந்தியா வந்த அரேபிய வியாபாரிகள் இதனை ஸ்பெய்ன் நாட்டிற்கு கொண்டு சென்றனர். அதனை அடுத்து ஐரோப்பாவில் எலுமிச்சையின் பெருமை பரவத் தொடங்கியது. இதன் மருத்துவ குணங்களை அறிந்த ஐரோப்பியர், எலுமிச்சையைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்யத் தொடங்கினர்.

இப்பழத்தில் 60 இற்கும் மேற்பட்ட வகைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனை பாரசீகத்தில் 'லெமு' என்றும் ஆங்கிலத்தில் 'லெமன், லைம், சைட்ரிஸ், மெடிகா எனவும் தமிழ், மலையாள மொழியில் 'எலுமிச்சை' என்றும் அழைக்கிறார்கள்.

### பயன்கள்

மேல்நாட்டினர் இப்பழத்தையும் அதன் விதைகளையும் தோலையும் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். இதிலிருந்து வாசனைப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன. கண்களைக் கவரும் மஞ்சள் நிறத்திலான எலுமிச்சம்பழத்தில் மனித உடல் ஆரோக்கியத்திற்கு மிக அவசியமான விற்றமின் 'C' யும் சுண்ணாம்புச்சத்தும் அதிகம் இருக்கின்றன.


இதன் மருத்துவப் பயனைப் பற்றி ஸ்கொட்லாந்தின் புகழ்பெற்ற மருத்துவர் 1853 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி செய்து பின்வருமாறு கூறினார், ''இப்பழத்தின் சாற்றை தொடர்ந்து அருந்துபவர்களின் உடலில் கெட்ட இரத்தம் சேருவதில்லை. உடலுக்கு எப்போதும் புத்துணர்ச்சியைத் தந்துகொண்டே இருக்கச் செய்கிறது. சிறிய பழமென்றாலும் மிகச்சிறந்த பழம். எல்லாவித நோய்களையும் நீக்கும் பழம்'' இந்தக் கூற்றுக்குப் பிறகு, இதன் முக்கியத்துவம் உலகெங்கும் பரவியது. எலுமிச்சம்பழத்தின் தனிச்சிறப்பு, இதன் சாற்றில் தான் இருக்கிறது. இதன் சாற்றில் பொஸ்பரஸ், சிட்ரிக் அமிலம், பொட்டாசியம் என்பன அடங்கியிருப்பதால் இது நம் உடலுக்கு சகல விதத்திலும் பயன் தருகிறது.

அவ்வாறே, தோலில் கூட மாப்பொருள், புரதம் மற்றும் உடலுக்குத் தேவையான கொழுப்புச் சத்து என்பன அடங்கி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனால், உணவுடன் எலுமிச்சைத் தோலையும் தினம் பயன்படுத்தினால் உடல் ஆரோக்கியம் அதிகரிக்கின்றது. இப்பழத்தின் தோல் கதிரியக்கத்தினால் ஏற்படும் தாக்கத்திலிருந்து நம்மைக் காக்கிறது.

-ஆர்.ஜே.-

### எலுமிச்சையின் மருத்துவப் பயன்கள்

* இரத்த அழுத்தம் கட்டுப்படும்
* தாகம் தணியும்
* வாயு நீங்கும்
* கல்லீரல் சீர்கேடுகள் நீங்கும்
* உஷ்ண வயிற்றுவலி தீரும்
* அஜீரணக் கோளாறு நீங்கும்
* தலைவலி நிற்கும்
* மலச்சிக்கலைப் போக்கும்
* இரத்தக்கட்டை நீங்கச் செய்யும்
* பித்தம் நீங்கும்
* நீர்க்கடுப்பு நீங்கும்
* களைப்புத் தீரும்
* கொலராவை தணிக்கும்
* மயக்கத்தை நீக்கும்
* மூலவியாதியைப் போக்கும்
* நீரிழிவைக் கட்டுப்படுத்தும்
* அஜீரணத்தை சரி செய்யும்
* உடம்பில் சாற்றை தேய்த்துக் குளிக்க தோல் வறட்சி நீங்கும்
* முடி கொட்டுவதைத் தடுக்கும்
* வாந்திபேதியை நிறுத்தும்
* உடல் நமைச்சலைப் போக்கும்
* வாய் கசப்பை நீக்கும்
* இரத்தத்தை சுத்தப்படுத்தும்
* புத்துணர்ச்சியைக் கொடுக்கும்.
* இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும்
* கண்பார்வையை கூர்மையாக்கும்
* உற்சாகத்தைக் கொடுக்கும்





# உலகின் பழைமையான விளையாட்டு



ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் விளையாடி வரும் விளையாட்டு 'அம்பு எய்தல்' விளையாட்டாகும். இந்த வில் வித்தை விளையாட்டைத்தான் மனிதன் முதன்முதலாக விளையாடியதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.


ஐரோப்பாவின் ஸ்பெய்ன் நாட்டிலுள்ள குகை ஓவியங்களில் வில், அம்பு முதலியவை காணப்படுகின்றன. இது, இடைக் கற்காலம் சார்ந்த விளையாட்டு என்றாலும் அம்பு எய்தல் விளையாட்டு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட நவீன விளையாட்டாக கி.பி 3 ஆம் நூற்றாண்டிலேயே தலைதூக்கியது.

யார் சிறப்பாக அம்பு எய்வது? என்ற போட்டி கி.மு 12 ஆம் நூற்றாண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துவிட்டது. 1879 ஆம் ஆண்டு 'தேசிய அம்பு எய்தல் கழகம்' அமெரிக்காவில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. 1884 ஆம் ஆண்டு முதல் தேசிய வெளிஅரங்கு அம்பெய்தல் செம்பியன் போட்டி நடந்து வருகிறது.

உலக அளவில் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஹோன்ஸ் டியூட்ஜென் என்ற வீரர் 1947 முதல் 1950 வரை நான்கு முறை அம்பெய்தலில் உலக செம்பியன் பட்டத்தை வென்றார். பெண்களைப் பொறுத்தவரை போலந்து நாட்டின் ஜேனினா ஸ்பைசஜோவா கேர்கோஸ்கா என்ற வீராங்கனை 1931 முதல் 1937 வரை ஏழு முறை அம்பெய்தலில் உலக வீராங்கனைப் பட்டத்தை வென்றார்.

எமது அயல்நாடான இந்தியாவில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த சிலர் இந்த அம்பு எய்தல் போட்டியில் மிகுந்த ஆர்வமாக உள்ளனர். 1973 முதல் அம்பு எய்தல் போட்டி இந்தியாவில் நடைபெற்று வருகிறது. 1989 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை அம்பு எய்தல் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் கிழவன் ஒருவனும் கிழவி ஒருத்தியும் வசிலீசா என்ற தங்களது மகளுடன் வாழ்ந்து வந்தனர். வீடு என்று ஒரே ஒரு குடிசை மட்டுமே அவர்களுக்கு இருந்தது. எனினும், அவர்களுடைய வாழ்க்கை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஒருநாள், துரதிர்ஷ்டம் அவர்களை வந்தடைந்தது. கிழவியின் உடல்நிலை மிக மோசமானது. தனது முடிவு நெருங்கி விட்டது என்பதை உணர்ந்த அவள் வசிலீசாவை அழைத்து சிறு பொம்மை ஒன்றைக் கொடுத்து அவளிடம் சொன்னாள், "நான் சொல்வது போலச் செய்வாய், என் குழந்தாய். இந்தச் சிறு பொம்மையைக்



புதிய தொடர்கதை

கவனமாக வைத்துக்கொள், யாரிடமும் இதைக் காட்டாதே. உனக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தால், பொம்மைக்கு உண்பதற்கு ஏதாவது கொடுத்து அதன் அறிவுரையைக் கேள். நீ தருவதை உண்ட பிறகு உன் துயரங்களில் எல்லாம் அது உனக்கு உதவும்" வசிலீசாவுக்குக் கடைசி முத்தம் கொடுத்துவிட்டுக் கிழவி இறந்து போனாள்.

சிறிது காலத்திற்குக் கவலையும் துயரமும் கொண்ட கிழவன் மீண்டும் மணம் புரிந்து கொண்டான். வசிலீசாவுக்கு இரண்டாவது தாய் ஒருத்தியைக் கொடுக்க வேண்டும் என்று அவன் நினைத்திருந்தான். ஆனால், மாறாக கொடுமையான மாற்றாந்தாய் ஒருத்தியையே அவளுக்குக் கொடுத்தான்.

மாற்றாந்தாய்க்கும் சொந்த மகள் இருவர் இருந்தனர். அவர்கள் இருவரும் பகைமை பாராட்டுபவர்களாக, இழிவானவர்களாக, திருத்த முடியாதவர்களாக இருந்தனர். மாற்றாந்தாய் அவர்களிடம் மிக அன்பாக இருந்தாள், முத்தமிட்டாள், செல்லங்கொடுத்தாள். ஆனால், வசிலீசாவிடம் எப்போதும் குற்றங்கண்டு தொந்தரவு செய்தாள். இதனால், வசிலீசா மகிழ்ச்சியற்று இருந்தாள். ஏனெனில், மாற்றந்தாயும் மாற்றாந்தாய்ச் சகோதரிகளும் தொடர்ந்து அவளைத் திட்டினர். அவளது சக்திக்கு மேல் வேலைவாங்கினர். அதிகமான வேலையினால் அவள் மெலிவாள், காற்றினாலும் சூரிய வெப்பத்தாலும் அவளது முகம் கறுக்கும். அருவருப்பானதாக மாறும் என அவர்கள் நம்பினார்கள். நாள் முழுக்க ஒருவர் மாறி ஒருவராக அவளிடம் வந்து சத்தம் போட்டனர்.

"வசிலீசா, வா இங்கே! வசிலீசா எங்கே இருக்கிறாய்? விறகு கொண்டு வா. மாவைப் பிசை. பால் கற, தரையைப் பெருக்கு! சுறுசுறுப்பாக வேலை செய்! முகத்தைச் சுளிக்காதே!"

தனக்கு இடப்பட்ட வேலை அனைத்தையும் வசிலீசா செய்தாள். ஒவ்வொருவரையும் திருப்தி செய்தாள். நாளுக்கு நாள் அவளது அழகு கூடிக் கொண்டே போயிற்று. அவள் வர்ணிக்க முடியாத அளவு அழகானவளாய் இருந்தாள். வசிலீசாவுக்கு எல்லாவற்றிலும் உதவி செய்தது அவளுடைய சிறிய பொம்மைதான்.

அதிகாலையில் வசிலீசா பசுவிடம் பால் கறப்பாள். பிறகு சாமான் அறைக்குள்ளாகச்சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு, பொம்மைக்குச் சிறிது பால் கொடுத்துவிட்டுக் கூறுவாள்.

**"சின்னஞ்சிறு பொம்மையே**
**பாராய்,**
**என்னிடம் வாராய்**
**பாலை உண்பாய்**
**தொல்லையைக் கேளாய்"**

பொம்மையும் பாலைப் பருகிவிட்டு வசிலீசாவுக்கு ஆறுதல் சொல்லி, அவளுக்காக அவளது அனைத்து வேலைகளையும் செய்யும். வசிலீசா நிழலில் உட்கார்ந்து பூத் தொடுத்தாள். அந்நேரத்திற்குள், காய்கறித்தோட்டத்தில் களையெடுப்பது, அடுப்பு மூட்டுவது, முட்டைக்கோசுக்குத் தண்ணீர் விடுவது ஆகிய வேலைகள் முடிந்துவிடும். வெயிலில் அடிபட்டுக் கறுப்பதினின்றும் தடுத்துக்கொள்ள மூலிகை ஒன்றை பொம்மை அவளுக்குக் காட்டியிருந்தது. வசிலீசா அதைப் பயன்படுத்தி மென்மேலும் அழகு மிக்கவளானாள்.

ஒருநாள் இலையுதிர்காலத்தில் நீண்டகாலப் பயணமாகக் கிழவன் வீட்டை விட்டுக் கிளம்பினான். மாற்றாந்தாயும் மூன்று சகோதரிகளும் குடிசையில் இருந்தனர்.

**அடர்ந்த காட்டின் ஓரத்தில் அந்தக் குடிசை அமைந்திருந்தது. அந்தக் காட்டில்தான் கண்ணிமைக்கும் நேரத்தில் கோழிக்குஞ்சுகளைப் போல ஆட்களை விழுங்கும் சூனியக்காரி பாபா-யகா வசித்து வந்தாள்**

அப்போது, வெளியே ஒரே இருட்டாகவும் மழை பெய்து கொண்டும் காற்று ஊளையிட்டுக் கொண்டு வீசியபடியும் இருந்தது. அடர்ந்த காட்டின் ஓரத்தில் அந்தக் குடிசை அமைந்திருந்தது. அந்தக் காட்டில்தான் கண்ணிமைக்கும் நேரத்தில் கோழிக்குஞ்சுகளைப் போல ஆட்களை விழுங்கும் சூனியக்காரி பாபா-யகா வசித்துவந்தாள்.

சகோதரிகள் மூவருக்கும் மாற்றாந்தாய் செய்வதற்குச் சில வேலைகள் கொடுத்தாள். முதலாமவள் ஜரிகை நெய்யவும் இரண்டாமவள் காலுறை பின்னவும் வசிலீசா நூல் நூற்கவும் தொடங்கினர். பிறகு மூவரும் அமர்ந்து வேலைபார்த்துக் கொண்டிருந்த இடத்தில் எரிந்து கொண்டிருந்த ஒரே ஒரு பிர்ச் மரச்சிராயைத் தவிர எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு அவள் படுக்கச் சென்றாள். அந்த மரச்சிராய் சிறிது நேரத்தில் படபடவென்று சத்தமிட்ட பிறகு திடீரென்று அணைந்து போயிற்று.

"என்ன செய்வது?" மாற்றாந்தாயின் இரு மகள்களும் கத்தினார்கள்.

"குடிசையில் இருட்டாக இருக்கிறது. நாம் வேலை செய்தாக வேண்டும். நம்மில் ஒருத்தி பாபா-யகாவிடம் சென்று நெருப்பு வாங்கிவர வேண்டும்"

"நான் போகமாட்டேன். நான் ஜரிகை நெய்து கொண்டிருக்கிறேன். பார்க்கப் போதுமான அளவுக்கு என்னுடைய ஊசி நல்ல பிரகாசமாக இருக்கிறது" என்றாள் மூத்தவள்.

"நானும் போகமாட்டேன். நான் காலுறை பின்னிக் கொண்டிருக்கிறேன். பார்க்கப் போதுமான அளவுக்கு என்னுடைய இரண்டு ஊசிகளும் பிரகாசமானவையாக இருக்கின்றன"

பிறகு அவர்கள் இருவரும் கத்தினார்கள். "வசிலீசா, இருக்கிறாள். அவள்தான் நெருப்பு வாங்கப் போயாக வேண்டும். வசிலீசா, இந்த நிமிடமே பாபா-யகாவிடம் போ!" குடிசையை விட்டு வசிலீசாவை அவர்கள் வெளியே தள்ளினார்கள். அவளைச் சுற்றிலும் இரவின் கருமை சூழ்ந்து நின்றது. காடோ அடர்த்தியானது. காற்றோ மூர்க்கமாக வீசியது. வசிலீசா நடுங்கினாள், கண்ணீர் சிந்தினாள். தனது பையில் உள்ள சிறிய பொம்மையை வெளியே எடுத்தாள்.

(தொடரும்....)

# மூன்று சோம்பேறிகள்

ஓர் ஊரில் மூன்று சோம்பேறிகள் இருந்தனர். அவர்கள் ஒரு வேலையும் செய்யாமல் அங்குள்ள வியாபாரிகளையும் ஏமாந்தவர்களையும் மிரட்டித் தமது காரியங்களைச் சாதித்துக் கொண்டனர். அவர்களை யாராலும் திருத்த முடியவில்லை. அவர்களின் தொல்லையிலிருந்து கடவுள் தான் தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர் அவ்வூர் மக்கள்.

ஒரு சமயம் பக்கத்துக் கிராமத்தில் திருவிழா நடந்தது. அங்கு சத்திரத்துக்கு வந்தவர்களுக்கு எல்லாம் உணவு இலவசமாக வழங்கப்பட்டது. தங்குவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டது. அது குறித்து அறிந்த மூன்று சோம்பேறிகளும் அங்கு சென்று அட்டகாசம் செய்தனர். உணவை இஷ்டம் போல் பெற்று வீணாக்கினர். சத்திர நிர்வாகத்துக்கு அவர்கள் நடந்து கொள்ளும் விதம் பிடிக்கவில்லை. ஆனாலும், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்பதற்கிணங்க அவர்களை ஒன்றும் தட்டிக் கேட்கவில்லை. அதுவே சோம்பேறிகளுக்கு மிகவும் வசதியாகப் போனது. அவர்கள் மிகவும் எல்லைமீறி நடந்து கொண்டனர்.

அன்றிரவு மூன்று சோம்பேறிகளும் நன்கு சாப்பிட்டுவிட்டு சத்திரத்தில் குறட்டை விட்டுத் தூங்கினர். திடீரென சத்திரத்தின் ஒரு பகுதியில் தீப்பற்றி, சோம்பேறிகள் படுத்திருந்த பகுதிக்கும் பரவியது. சத்திரத்தில் தங்கியிருந்தவர்கள் பிழைத்தால் போதும் என்று ஓட ஆரம்பித்தனர். சிலர் மூன்று சோம்பேறிகளையும் எழுப்பிப் பார்த்தனர். ஆனால், மூவரும் அசைந்து கொடுக்கவில்லை.



தீப்பிழம்பு அதிகமாகவே, சூடு தாங்காமல் ஒரு சோம்பேறி, "அம்பலமே வேகுதடா" என்றான்.

அதைக் கேட்ட இரண்டாவது சோம்பேறி, "அதைத்தான் சொல்வானேன்.. நாவுதான் நோவானேன்..?" என்று சொல்லிக்கொண்டே புரண்டு படுத்தான்.

அவர்கள் இருவரும் சொல்வதைக் கேட்ட மூன்றாவது சோம்பேறி கோபத்தோடு, "சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே" என்று புலம்பிக் கொண்டே குப்புறப்படுத்தான். அதற்குள் தீ வேகமாகப் பரவி அவர்களைச் சூழ்ந்து கொண்டது. மூவரும் தீயில் கருகி மாண்டனர். சோம்பல் சோகத்தையே அளிக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர்வாக ரீதியிலான கட்டமைப்பு

**இந்த வருடம் தனது 60 ஆவது வருடத்தை கொண்டாடுகின்ற சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி)யின் ஆரம்பம் மற்றும் அதன் நடைமுறைகள் பற்றிய சில விபரங்களை கடந்த இதழில் தந்திருந்தோம்! அதன் தொடர்ச்சியாக இந்த வாரம், மேற்படி ஐ.சி.சியின் நிர்வாக கட்டமைப்பு அதன் அதிகாரிகள் அதன் இலக்கு, நோக்கங்கள், பொறுப்புக்கள் எவை என்பன குறித்த சில விபரங்களை இந்த இதழில் பார்ப்போம்.**

## நிர்வாக கட்டமைப்பு

சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழுவில் அந்தந்த நாடுகளின் கிரிக்கெட் சபைத் தலைவர்கள் அங்கத்துவம் வகிப்பர். அத்தோடு, இணை உறுப்புரிமை பெற்ற மூன்று நாடுகளின் உறுப்பினர்களும் இதில் அங்கத்துவம் வகிப்பர். சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் நிர்வாகத் தீர்மானங்களை இந்தக் குழுவே மேற்கொள்ளும்.

## நிரந்தர அதிகாரிகள்

சர்வதேச கிரிக்கெட் சபையானது ஒரு நிறுவன அமைப்பாக செயற்படுத்துவதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக நிரந்தர அதிகாரிகள் பலரும் உள்ளனர். தற்போதைய இந்த நிரந்தர அதிகாரிகள் குழுவின் தலைவராக தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த ஹருன் லொகார்ட் என்பவர் கடமையாற்றுகின்றார். அத்தோடு, உதவி அதிகாரிகள், சட்டத்துறை மற்றும் நிதித்துறை அதிகாரிகள், பாதுகாப்புத்துறை மற்றும் கிரிக்கெட் அபிவிருத்தி தொடர்பான அதிகாரிகளையும் இதர உறுப்பினர்களையும் கொண்டதாக மேற்படி நிரந்தர அதிகாரிகளின் குழு அமைந்திருக்கும்.

மேலும், ஊடக விவகாரங்களுக்கான தனிப் பிரிவொன்றும் இந்த அதிகாரிகள் குழுவில் இடம் பெற்றிருக்கும். அதுமட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலான கிரிக்கெட் போட்டிகளுக்கு பணியாற்றுவதற்கான நடுவர்களைக் கொண்ட உயர் மட்ட நடுவர் குழுவொன்றும் இந்த அதிகாரிகள் குழுவில் இடம் வகிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. கடந்த சில வருடங்களாக இந்தப் போட்டி மத்தியஸ்த சபையின் தலைவராக இலங்கையின்முன்னாள் கிரிக்கெட் வீரரான ரஞ்சன் மடுகல்ல பதவி வகித்து வருகின்றார். இந்த மத்தியஸ்தர் சபையின் உறுப்பினராக இலங்கையின் மற்றுமோர் முன்னாள் வீரரான ரொஷான் மஹாநாமவும் பதவி வகிக்கின்றார்.



## நோக்கம்

- கிரிக்கெட் துறையின் தனித்துவத்தைப் பேணுவதுடன், அதனை முன்னெடுத்துச் செல்வது.
- கிரிக்கெட் தொடர்பான சிறப்புத் தினங்களை அனுஷ்டிக்கும் விதமான விழாக்களுக்கு ஏற்பாடுகளை செய்தல்.
- உறுப்பினர்களுக்கும் பங்காளிகளுக்கும் உயர்தரத்திலான சேவையினை வழங்கல்.
- சபையின் உறுப்பினர்களது எதிர்கால வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு கிரிக்கெட் துறையின் வணிக உரிமையை நேரிய முறையில் முன்கொண்டு செல்லல்.

## இலக்கு

ஆண், பெண் இன வேறுபாடின்றி எல்லாத் தரப்பினரும் ரசித்து வருகின்ற ஒரு போட்டியாக கிரிக்கெட் அமைந்துள்ளமையினால், இதனைக் கொண்டு நாடுகள், நாட்டு மக்கள், போட்டியாளர்களுக்கு இடையேயும் ஒற்றுமை புரிந்துணர்வுகளை ஏற்படுத்துவதும் இதன் இலக்காகக் கொள்ளமுடியும்.

## பொறுப்பு

2006 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் சபையான தனது பொறுப்புக்கள் எவை என்பது தொடர்பான வேலைத்திட்டமொன்றை வெளியிட்டது. 2010 ஆம் ஆண்டு வரை இந்த வேலைத் திட்டத்திற்கமைய பணியாற்றுவதற்கு அதன் உறுப்பினர்கள், அதிகாரிகள் அனைவரும் கடமைப்பட்டுள்ளனர். மேலும் சர்வதேச தரத்திலான போட்டிகள் நடைபெறுகையில் போட்டியை நடத்துகின்ற நாடு தமது எதிர் அணி அதிகாரிகளுக்குரிய கவனிப்புக்களை, வசதிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே சர்வதேச கிரிக்கெட் சபையின் தீர்மானமாகும். அதுமட்டுமன்றி சர்வதேச போட்டிகள் நடைபெறும் போது அரங்கில் பார்வையாளர்கள் பார்வையிடும் வகையில் அகன்ற தொலைக்காட்சித் திரை அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் ஐ.சி.சியின் உத்தரவாகும். கிரிக்கெட் போட்டிகளை சீராக நடத்துவதற்குரிய வழிவகைகளை கையாளுகின்ற கிரிக்கெட் சபையானது கிரிக்கெட் போட்டி தொடர்பான பிரச்சினைகள் தோன்றுகையில் அவற்றிற்கு எதிராக உடனடியாக செயலில் இறங்கும். இதன் காரணமாகவே போட்டிகள் நடைபெறுகையில் போட்டியில் நடுவர்கள் பணியாற்றுகின்ற அதே வேளை, போட்டியில் பங்குகொள்கின்ற நாடுகளைச் சேராத போட்டி மத்தியஸ்தர் ஒருவரையும் ஐ.சி.சி நியமிக்கின்றது.



## சர்வதேச கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர்கள்



**கொலின் கவுட்ரி (இங்கிலாந்து) 1989-1993**



**சேர்.கிளைட் வொல்கொட் (மே.இ.தீவுகள்) 1993-1997**



**ஜக்மோகன் தல்மியா (இந்தியா) 1997-2000**



**மெல்கம் கிரே (அவுஸ்திரேலியா) 2000-2003**



**எஷான் மானி (இங்கிலாந்து) 2003-2006)**



**பேர்ஸி சொன் (தெ.ஆபிரிக்கா) 2006-2007**



**ரேமாலி (தெ.ஆபிரிக்கா) 2007-2008**



**டேவிட் மோகன் (இங்கிலாந்து) 2008**

## சர்வதேச கிரிக்கெட் சபையின் தற்போதைய நிறைவேற்று உறுப்பினர்கள்

**(2008 ஓகஸ்ட் மாதமளவில்)**

| | |
|---|---|
| டேவிட் மோகன் | - தலைவர் |
| ஹருன் லொகாட் | - தலைமை நிறைவேற்று அதிகாரி |
| சரத் பவார் | - நிறைவேற்று அதிகாரி |
| கிரேக் ஒ கொனர் | - அவுஸ்திரேலியா |
| இபின் ஜமாலி | - பங்களாதேஷ் |
| ஜயில்ஸ் கிளார்க் | - இங்கிலாந்து |
| ஷாஷான்க் மனோஹர் | - இந்தியா |
| எலன் அயிஸெக் | - நியூஸிலாந்து |
| இஜாஸ் பாட் | - பாகிஸ்தான் |
| அர்ஜுன ரணதுங்க | - இலங்கை |
| நோமன் அரெண்டிஸே | - தெ.ஆபிரிக்கா |
| ஜுலியன் ஹன்ட் | - சிம்பாப்வே |
| நீல் ஸ்பெயிட் | - பர்மியூடா |
| சமீர் இனாம்தார் | - கென்யா |
| இம்ரான் கவாஜா | - சிங்கப்பூர் |

*அர்ஜுன ரணதுங்க தற்போது இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியில் இல்லாததால் அவருக்குப் பதிலாக இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.லியனகம நியமிக்கப்பட்டுள்ளார்.*

## ஒழுக்கக் கோவை

சர்வதேச மட்டத்திலான போட்டியின்போது அதில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள், அதிகாரிகள், பயிற்சியாளர்கள், நடுவர்கள் ஆகிய அனைவருக்கும் சட்டதிட்டங்கள், ஒழுக்க நெறிகளை ஐ.சி.சி வகுத்துள்ள அதேவேளை, அவற்றை எவரும் மீறமுடியாத வகையில் அவை கடுமையாக கடைப்பிடிக்கப்படுகின்றன. போட்டியின்போது துடுப்பாட்ட வீரர் ஆட்டமிழந்து விட்டதாக நடுவர் தீர்ப்பளித்து விட்டாராயின் அது தவறான தீர்ப்பாகத் தோன்றினாலும் துடுப்பாட்ட வீரர் எவ்வித உணர்வுகளையும் வெளிக்காட்டாமல் ஆடுகளத்திலிருந்து வெளியேற வேண்டும்.மாறாக வாய்த்தர்க்கத்தையோ, அதிருப்தியையோ வெளிக்காட்டினால் குறித்த போட்டியாளருக்கு எதிராக சட்டப்படி ஐ.சி.சி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

எந்தவொரு கிரிக்கெட் வீரருக்கும் அணிக்கும் எந்தவொரு பாரபட்சமுமின்றி நடந்து கொள்வதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை கட்டுப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராட்சதர்களும் குள்ளர்களும்


உலகின் தற்போதைய உயரமான மனிதர் ஷிஷுன் ஜுன்டோ


உலகின் தற்போதைய குள்ள மனிதர் ஹி பிங்பிங்



**'கலிவரின் சுற்றுப் பயணம்' (Gulliver's Travels), உலகெங்கும் உள்ள வாசகர்களின் உள்ளங்களை கவர்ந்த நாவலாகத் திகழ்கின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கலிவரையும் லிலிபுட் குள்ளர்களையும் யதார்த்த உலகில் காணமுடியுமா? இல்லாவிடின் அது வெறும் கற்பனை தானா? என்ற கேள்வி உங்களுக்குள் எழுந்திருக்கும். இவ்வாறான ராட்சத மனிதர்கள் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன.**

## கிரேக்க புராணக்கதைகள்

கிரேக்க புராணக்கதைகளிலேயே அதிளவில் ராட்சதர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. கடவுளின் மிக நெருக்கமானவர்களாகவே கிரேக்க இதிகாசங்களில் ராட்சதர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களில் 'அக்ரியஸ்' (Agrios) முக்கியத்துவம் பெறுகின்றான். அவன் மனித இறைச்சியினை உட்கொள்பவன். இவனின் உடலின் அரைப்பகுதி மனித உடலாகவும் எஞ்சிய பகுதி கரடியினுடையதாகவும் இருக்கும். அவ்வாறே 'கொயோன்' எனும் ராட்சதனும், மூன்று உடல்களைக் கொண்டவன் என கிரேக்க புராணக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றது. 'கஹொஸ்' எனும் ராட்சதன் மூக்கிலிருந்து தீச்சுவாலைகளை வெளியேற்றுபவனாகவும் சித்தரிக்கப்படுகின்றான்.



## பத்து ராட்சதர்கள்

இவ்வாறான ராட்சதர்கள் பற்றி இலங்கை வரலாற்றிலும் அறிய முடிகின்றது. துட்டகைமுனு அரசனிடம் ராட்சதர்கள் 10 பேர் இருந்தனர் என்றும் கூறப்படுகின்றது. இவர்கள் அரசனின் சம காலத்தவர்களாவர். நந்திமித்ர, சுரநிமல, மகாசேன, கோட்டம்பர, தேரபுத்தாபய, பரண,வேலுசுமன, பஞ்சதேவ, புஸ்ஸதேவ, லிபிய வசப ஆகியோரே அந்த 10 ராட்சதர்களுமாவர்.இந்த ராட்சதர்கள் 10 பேரும் துட்டகைமுனு அரசனின் அரச பலத்தினைப் பாதுகாக்க அரிய சேவைகளை ஆற்றினார்கள் என்று கூறப்படுகின்றது.

## மரபணு விஞ்ஞானத்தில் பதில்

ராட்சதர்கள் எனப்படுவோர் கடவுள் அருளால் சாதாரண மனிதர்களையும் விஞ்சும் சக்தியினைப் பெற்றவர்கள். ஆக, உடற் பருமனை வைத்து அவர்களை ராட்சதர்களாகக் கருதமுடியாது. ராட்சதர்கள் எப்படி பிறக்கின்றனர் என்பதற்கு மரபணு விஞ்ஞானம் பதில் அளித்துள்ளது.

### மரபணு என்பது....

மரபணுவை பரம்பரையிலிருந்து பரம்பரைக்கு நமது தோற்ற இயல்புகளை கடத்திச் செல்லும் தூதுவனாகக் குறிப்பிடலாம். உங்களது உருவம் உங்கள் தாயைப் போன்றதாகவோ அல்லது தந்தையைப் போன்றதாகவோ இருக்கும். இதற்கு மரபணுவே காரணமாகும். இந்த மரபணுக்களுக்கு தேவையான ஆலோசனைகளை டி.என்.ஏ எனப்படும் டிஒக்சிரைபோ நியூக்ளிக் அமிலமே அளிக்கின்றது. இதனை 'ஏவுகணை அமிலம்'என்று குறிப்பிடப்படுவதில் தவறில்லை.

ஒவ்வொரு நபரிலும் உள்ள டி.என்.ஏ மரபணுவில் தாயின் இயல்புகளும் தந்தையின் இயல்புகளும் உள்ளடங்கியிருக்கும். அதேபோன்று ஒவ்வொரு நபரிலும் வெளிப்படையான இயல்புகள், மறைமுகமான இயல்புகள் என இரு வகை இயல்புகள் இருக்கின்றன. ஏதோவொரு காரணத்தினால் ராட்சதரை உருவாக்கக் கூடிய மரபணு தீவிரம் பெறுமானால் ராட்சத உருவில் குழந்தை பிறக்கக்கூடும் அல்லது மரபணு திரிபுபடுவதனாலும் இந்த நிலை உருவாகலாம். ராட்சதர் உருவாவதனை ஒரு நோய் அறிகுறியாகவும் கொள்ளலாம். அதாவது டி.என்.ஏ யில் உள்ள திண்மக் கட்டமைப்பு அசாதாரண வளர்ச்சி பெறுவதனால் இந்த நிலை ஏற்படும். இவ்வாறான திரிபு நிலைக்கு காரணமாகும் விடயங்கள் குறித்து விஞ்ஞானிகளால் உறுதியாகக் குறிப்பிட முடியவில்லை.

## லிலிபுட் குள்ளர்கள்

கலிவரின் சுற்றுப் பயணக் கதையில் அவர் லிலிபுட் தீவிலுள்ள குள்ளர்களை சந்திக்கின்றார். அவர்கள் உருவத்தில் மிகச் சிறியவர்கள். இவ்வாறான குள்ளர்கள் பிறக்க முடியுமா? கிரேக்க புராணக் கதைகளில் இவ்வாறான குள்ளர்கள் பற்றிக் குறிப்பிடப்படுகின்றன. இவர்கள் அக்கதைகளில் Pygmy என்று அழைக்கப்பட்டனர். இன்று மிகச் சிறிய விலங்கினங்களை அழைக்க இந்தப் பெயரே பயன்படுத்தப்படுகின்றது.



இவ்வாறான குள்ளமான மனிதர்கள் பிறக்கவும் டி.என்.ஏ மரபணுக்களே காரணமாகும். உயரத்துடன் தொடர்புடைய மரபணுவின் மறைமுக இயல்புகள் தீவிரமடைதல் அல்லது அந்த மரபணு இயல்பில் ஏற்படும் திரிபு நிலை இதற்கு காரணமாக அமையலாம். குறிப்பாக கர்ப்பிணித்தாய் ஒருவர் பலவிதமான கதிர்வீச்சுகளுக்கு அதிகளவு இலக்காகின் குள்ளர்கள் பிறக்கக்கூடும் என்று குறிப்பிடப்படுகின்றது.

## குள்ள மனிதர்கள்

குள்ள மனிதர்கள் எனப்படும் பிக்மிக்கள் வனாந்தரப் பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்களின் உயரம் 1.5 மீற்றராக மட்டுமே இருக்கும். ஆசியாவில் சில நாடுகளிலும் ஆபிரிக்க நாடுகளிலும் இவ்வாறான மனிதர்களைக் காணமுடியும். கொங்கோ குடியரசில் வசிக்கும் குள்ள மனிதர்கள் குள்ள உருவம் காரணமாகவே பிரசித்தி பெற்றுள்ளனர். அவர்களை இனத்தின் பெயரால் அழைக்காமல் பிக்மிக்கள் என்றே அழைக்கின்றனர். ஆபிரிக்காவில் வசிக்கும் அக்கா, பபென்சல், பின்ஷா ஆகிய கோத்திரங்களிலும் குள்ள மனிதர்கள் உள்ளனர். இவர்களின் பாடல்கள் மற்றும் இசைக் கருவிகள் உலகளவில் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

குள்ள மனிதர்கள் பற்றிய புராணக்கதைகள் பல உள்ளன. கிரேக்க புராணக் கதைகளில் குள்ள மனிதர்களின் உயரம் 6-27 அங்குலமாக மட்டுமே உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குள்ள மனிதர்களைக் கௌவிச் செல்ல பல்வேறு பகுதிகளில் இருந்தும் பறவைகள் வந்ததாகக் கூறப்படுகின்றது. பறவைகளிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள அவர்கள் பொந்துகளில் அஞ்சி வாழ்ந்ததாகவும் இதனால், அவர்களின் சந்ததியும் குள்ளமாகவே தொடர்ந்ததாகவும் அந்தப் புராணக் கதைகளில் குறிப்பிடப்படுகின்றன.

## உயரமான மனிதர்கள்

இந்த இரு தரப்பினர்களைத் தவிர அசாதாரணமான உயரம் கொண்டவர்களும் உள்ளனர். இதற்கும் டி.என்.ஏ சார்ந்த நோய் அறிகுறிகளே காரணமாகும். இவர்கள் உயரமாக இருப்பதனைத் தவிர வேறு எந்த நோய்களும் அவர்களுக்கிருக்காது. அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் உயரமானவர்களாகவும் இருக்க மாட்டார்கள். எமது டி.என்.ஏ மரபணுக்களில் உடல் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் இயல்புகள் உள்ளன. இதனால், வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட வயது வந்தவுடன் எமது வளர்ச்சி நிறுத்தப்பட்டுவிடும். எனினும், அசாதாரண உயரம் கொண்டவர்கள் அவ்வாறில்லை. அவர்களின் உயர வளர்ச்சி வாழும் வரை தொடரும்.

எவ்வாறாயினும், இவை பரிணாம வளர்ச்சியின் வெளிப்பாடுகள் என்றே விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அந்த வகையில் ஒருவர் சமூகத்திற்கு ஆற்றும் சேவைகளின் அடிப்படையிலேயே முக்கியத்துவம் பெறுகின்றார். மாறாக, உடல் அளவின் அடிப்படையில் அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அற்லஸ் அறிவுக்கு விருந்து - 195 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...**

| போட்டி: 01 | போட்டி: 02 | போட்டி: 03 | போட்டி: 04 | போட்டி: 05 (குறு.போ-206) |
|---|---|---|---|---|
| எஃப். ஷிஃப்னா, தரம் - 4[T], புனித அந்தோனியார் ம.கல்., கண்டி. | ஆ. பிரஸ்காந்தன், தரம் - 4, காஞ்சிரங்குடா காமாட்சி வித்., மட்டக்களப்பு. | ரிஸ்வின் ரீஸா, தரம் - 11, தமிழ் ம.கல்., அப்புத்தளை. | ர. பிரகதி, தரம் - 8[C], பாக்கியம் தே.கல்., மாத்தளை. | எஃப். ஹன்ஸா, உயர் தரம், இஸ்லாஹிய்யா பெ.அ.கல்., புத்தளம். |





**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.03.11 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 198**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## 1 அழகாக நிறம் தீட்டுவோம்



## 5 குறுக்கெழுத்துப் போட்டி இல.209



**மேலிருந்து கீழ்**

01. இலங்கைக்கு வருமானத்தை ஈட்டித் தருகின்ற சிறு ஏற்றுமதிப் பயிரொன்று.
02. தோல் - ஒத்தகருத்துச் சொல்.
04. 'கோள்' என்றும் அர்த்தப்படும்.
05. ஸ்வரங்களின் ஏற்ற-இறக்க அமைப்பு.
07. கல்/ உலோகத்தினால் வடிவமைக்கப்படுகின்ற உருவம்.
08. பெண் - ஒத்தகருத்துச் சொல்

**இடமிருந்து வலம்**

01. இணையமூடாக அனுப்பி வைக்கக்கூடிய தபாலை இவ்வாறு அழைப்பதுண்டு.
03. வசதிகள் குறைந்த மிகச் சிறிய கிராமம் என்றும் கூறலாம்.
06. 'வகை' என்பதன் ஒரே கருத்துடைய சொல்.
07. 'காட்டு விலங்குகளின் அரசன்' என சிறப்பித்துக் கூறப்படுவது.
09. அஃறிணை பன்மை வினாச் சொல்லொன்று.

**குறுக்கெழுத்துப்போட்டி 206 விடைகள்**

**மேலிருந்து கீழ்**

01. பௌத்தம்
02. மிதுனம்
03. தேள்
05. கம்பளம்
07. சகதி
09. பீடு

**இடமிருந்து வலம்**

01. பௌர்ணமி
04. துகள்
06. தரிசனம்
08. கம்பளி
09. பீதி
10. பேடு
11. தம்பி

**குறுக்கெழுத்துப் போட்டி -209**
**"விஜய்"**
**த.பெ.எண். 2037**
**கொழும்பு**

**பாராட்டுப் பெறுவோர்**

ம. விக்ன நிலுக்ஷன், தரம்-11,ரணபிம றோயல் கல்., கண்டி.

எம்.எம்.எம். நஸ்ரி, தரம் -9, அல்- மினா ம.வித்., மாத்தறை.

அ. தரணியா, தரம் - 8, கொத்தியாபுலை கலைவாணி வித்., மட்டக்களப்பு.

## 4 கணக்குப் புதிர்

சேகரன் ஒரு நிறுவனத்தில் ஒரு நாளைக்கு 5.00 ரூபாய் கூலிக்கு வேலையில் சேர்ந்தான். சில நாட்களில் அந்த வேலையிலிருந்து விலகி விட்டான். அந்நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து இடைக்கிடையே 10 நாட்கள் அவன் வேலைக்கு சமூகமளிக்கவில்லை. அவ்வாறு சமூகமளிக்காத நாட்களில் ஒரு நாளைக்கு ரூ.1.00 வீதம் அபராதம் செலுத்த வேண்டும். வேலைக்குச் சென்ற நாட்களுக்காக அவனுக்குக் கிடைத்த மொத்தப் பணம் ரூ.240.00 ஆகும்.

- ஆகவே, சேகரன் அந்நிறுவனத்தில் எத்தனை நாட்கள் வேலை செய்திருக்கின்றான்? ...............
- அவன் எத்தனை ரூபாய் அபராதம் செலுத்தினான்? ...............................

## அறிவுக்கு விருந்து - 195 விடைகள்

**போட்டி - 01**

(A) படத்தை தலைகீழாகத் திருப்பிப் பார்க்கவும். இன்னொரு முகத்தைக் காணலாம்.

**போட்டி - 03**

1 - ஐம்பொறி
2 - ஐம்பெருங்காப்பியம்
3 - நாற்படை
4 - நால்வேதம்
5 - ஏழு ஸ்வரங்கள்

**போட்டி - 04**

1. நற்செய்கை
2. முடிச்சு
3. பழங்கதை/ கட்டுக்கதை
4. முன்னுரை
5. படிக்கட்டு
6. அணைக்கட்டு
7. வெற்றி
8. அபிப்பிராயம்/ கருத்து

## போட்டிகளில் பங்குபற்றுவோருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்!

நீங்கள் அறிவுக்கு விருந்து போட்டிகளில் கலந்து கொண்டு பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளாக விரும்புகிறீர்களா? அப்படியாயின், போட்டிகளுக்கான விடைகளை எழுதி அனுப்பும்போது **உங்கள் பெயர், வீட்டு முகவரி, கற்கும் பாடசாலை, தரம், பாடசாலை முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம்** என்பனவற்றை தெளிவாக எழுதி, விடைகளை **தபாலட்டையில்** மாத்திரம் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள். அத்துடன், மேற் குறிப்பிட்ட விபரங்களை எழுதி அனுப்புபவர்கள் மாத்திரமே பரிசுக் குலுக்களில் இணைத்துக் கொள்ளப்படுவதோடு, உங்களுக்குரிய பரிசுகளை காலதாமதமின்றி உரிய முறையில் அனுப்பி வைக்க இது வசதியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள்.

## 3 (A) பழங்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக



(அ) ........................ (ஆ) ........................



(இ) ........................ (ஈ) ........................

**(B) பிழை திருத்துங்கள்**

1. விலக்குமறியல்- ........................
2. வேற்ப்புமணு - ........................
3. கத்திரிக்கோள் - ........................
4. மூல்யதனம் - ........................
5. நீள்டூழி வாள்க - ........................
6. தப்புத்தவறி - ........................

## 2 ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அரசனின் எதிர்ப்பு

அன்று ஒல்லாந்தர் இரண்டாவது இராஜசிங்க மன்னனின் ஒப்பந்தத்தின் பிரதி குறித்து பொருட்படுத்தவில்லை. கைப்பற்றிய கோட்டைகளில் தமது படை அணிகளையே வைத்திருந்தனர். இரண்டாம் இராஜசிங்க மன்னன் அதனை எதிர்த்தான். ஒல்லாந்தர் அதனையும் பொருட்படுத்தவில்லை.

கி.பி 1639 இல் ஒல்லாந்தர் திருகோணமலையைக் கைப்பற்றினர். கி.பி 1640 நீர்கொழும்பையும் காலியையும் அவர்கள் அடிபணிய வைத்தனர். அவர்கள் கைப்பற்றிய பிரதேசங்களில் ஆட்சியை ஏற்படுத்தி அதன் நிர்வாக மைய இடமாக காலியைத் தெரிவு செய்தனர். அதன் அதிகாரியாக 'கொட்டர்' என்பவனை நியமித்தனர்.

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கு ஒல்லாந்தர் குறித்து எதுவும் புரியாமல் இருந்தாலும் போர்த்துக்கேயரின் ஆட்சி அதிகாரங்கள் சரிந்து செல்வது குறித்து மகிழ்ச்சி அடைந்தான். அதனை வெளிப்படுத்தாமல் ஒல்லாந்தர் கோட்டைகளில் குடியேறியது குறித்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினான். நீண்ட நாட்கள் செல்லுமுன்னே ஒரு ஐரோப்பியருக்குப் பதிலாக மற்றொரு ஐரோப்பியர் வந்துள்ளனர் என்பது மாத்திரம் அரசனுக்குப் புரிந்தது.

அப்பொழுது நீர்கொழும்புக் கோட்டையை போர்த்துக்கேயரிடம் இருந்து விடுவித்து தொன் பல்தசார் முதலி என்பவர்தான் அதனை நிர்வகித்துக் கொண்டிருந்தார். திடீரென மீண்டும் போர்த்துக்கேயர் நீர்கொழும்புக் கோட்டையைத் தாக்கி கைப்பற்றினர். தமது பெருஞ்சேனையொன்றை அங்கு நிறுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக 10 வகை ஈரூடக உயிரினங்கள் கண்டுபிடிப்பு!





கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொலம்பியாவிலுள்ள வனாந்தரப் பகுதிகளில் அருமையான கண்டுபிடிப்பொன்றை விலங்கின ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டிருந்தனர். அதாவது, புதுவிதமான 10 வகை ஈரூடக உயிரினங்களையே இவர்கள் இவ்வாறு கண்டுபிடித்துள்ளனர்.

தரையிலும் நீரிலும் வாழக் கூடியனவாகக் கருதப்படுகின்ற இந்த ஈரூடக ஜீவராசிகள் கொலம்பியாவிற்கும் பனாமாவிற்கும் இடைப்பட்ட 'டெரியன் கெப்' என்றழைக்கப்படுகின்ற காட்டுப் பகுதியிலேயே ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தக் காட்டுப் பகுதியில் தமது ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருந்தபோது, 60 ஈரூடக உயிரினங்களையும் 20 ஊர்வன வகையைச் சேர்ந்த உயிரினங்களையும் 120 வகைப் பறவைகளையும் ஆராய்ச்சியாளர்களுக்கு காணக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. இவை இப்பகுதிகளுக்கு மாத்திரமே பழக்கப்பட்ட உயிரினங்களாக இருப்பதாகவே மேற்படி ஆராய்ச்சிக் குழு தெரிவிக்கின்றது.

"இந்த வனாந்தரப் பகுதி மிகுந்த வித்தியாசத்தையும் ஆச்சரியத்தையும் கொண்டுள்ளது. ஒன்றுக்கொன்று வித்தியாசமான உயிரினங்களை இங்கு காண முடிந்தது" என்று சர்வதேச விலங்கினப் பாதுகாப்பு சங்கத்தை சேர்ந்த வின்சன்ட் ரொட்ரிகஸ் என்பவர் தெரிவிக்கின்றார்.

"உலக அளவிலும் கொலம்பியாவிலுள்ள ஏனைய வனப்பகுதிகளிலும் உயிரினங்கள் பல அழிவுற்று வருவதாக உலகம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இந்தப் புதிய வரவேற்புக்குரிய நல்ல தகவல் கிட்டியுள்ளது" என்றும் ரொட்ரிகஸ் மேலும் தெரிவித்துள்ளார். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட ஈரூடக உயிரினங்களுள் உடல் அமைப்பில் சிற்சில மாறுபாடுகளைக் கொண்ட கண்ணாடி இழை வடிவிலான மூன்று வகையான தவளைகளும் வித்தியாசமான பல வர்ணங்களிலான இரண்டு வகையான தவளைகளும் தவளை இனத்தை ஒத்த வித்தியாசமான மேலும் சில உயிரினங்களும் அடங்குகின்றன.

ஆரோக்கியமான இயற்கை சூழலைக் கொண்டிருக்கும் ஒரு வனப் பகுதியாக இப்பகுதியை கருதமுடியும் என்றும் கருதப்படுகின்றது. ஏனெனில், ஈரூடக உயிரினங்கள் பெருகி வாழ்வதற்கு வனப்பகுதியொன்று ஆரோக்கியமான சூழலைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அதன்படி இந்த வனப்பகுதியில் இத்தனை புதுவகை உயிரினங்கள் இருப்பதன் மூலம் இங்குள்ள சுற்றுச் சூழலும் ஆரோக்கியமானதாக அமைந்துள்ளதாகவே கருதப்படுகின்றது.










இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, மார்ச் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 04, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org